வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 09.04.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 100 பக்கங்கள் : 12

## பொருளாதார வளர்ச்சி வெற்றியடைய சட்ட கட்டமைப்பு நவீனமாக வேண்டும்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஏப். 09

**நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அரசாங்கத்தின் வேலைத்திட்டம் வெற்றியடைய சட்ட கட்டமைப்பும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் - இவ்வாறு கூறியுள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

கண்டியில் சட்டத்தரணிகளை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டமே இலங்கையின் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப விரைவான தீர்வாகும். அதன் பயனை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

அத்துடன், அனைத்து துறைகளிலும் நவீனமயப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக புதிய சட்டக் கட்டமைப்பு கொண்டுவரப்படும். இந்த செயல்பாடுகளுக்கு சட்டத்துறையில் உள்ள அனைவரினதும் ஆதரவை 11

## அனைத்து இரத்த வகைகளுக்கும் யாழ். போதனாவில் தட்டுப்பாடு!

### குருதிக்கொடை வழங்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் “ஓ“ வகை குருதிக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. அத்துடன், ஏனைய குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, பொது மக்கள் குருதிக் கொடை அளிக்க வேண்டும் என்று இரத்த வங்கி கேட்டுள்ளது.

யாழ். போதனா மருத்துவமனையில் இதய சத்திர சிகிச்சை மற்றும் ஏனைய சத்திர சிகிச்சைகள், விபத்துகளில் காயமடைந்தவர்கள், 11

## ஐ. எம். எவ்வின் 3ஆம் கட்ட கடன் ஜூன் மாதத்துக்குள்!

### நிதி இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, ஏப். 09

சர்வதேச நாணய நிதியத்தின் நீட்டிக்கப்பட்ட நிதி வசதியின் மூன்றாவது தவணை ஜூன் மாதத்துக்குள் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு, 11

## இலங்கைக்கு உதவத் தயார்

### பான் கி மூன் உறுதி



கொழும்பு, ஏப். 09

இலங்கை முகங்கொடுத்திருக்கும் காலநிலை மாற்ற சவால்களைக் கையாள உதவுவதற்கு தயார் என்று உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்தின் தலைவரும் ஐ. நா. சபையின் முன் னாள் பொது செயலாளருமான பான் கி -மூன் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் உறுதியளித்துள்ளார்.

கடந்த வாரம் தென் கொரிய தலைநகர் 11

## சகல நலன்புரி முகாம்களும் இந்த ஆண்டுக்குள் மூடப்படும்!

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

வவுனியா, ஏப். 09

போரால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ள அனைத்து நலன்புரி முகாம்களும் இந்த ஆண்டிலேயே மூடப்படும் என்று என்று நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தற்போது, யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று நலன்புரி நிலையங்கள் இயங்கி வருகின்றன. அங்கு 10 குடும்பங்கள் தங்கியுள்ளன. இதில் 9 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு இந்த 11

## மேல் நீதிமன்ற நீதிபதியாக அலெக்ஸ்ராஜா நியமனம்!



முல்லைத்தீவு, ஏப். 09

முல்லைத்தீவை சேர்ந்தவரான ஆசிர்வாதம் கிறேசியன் அலெக்ஸ்ராஜா மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ளார். இதன்மூலம், முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த முதல் மேல் நீதிமன்ற நீதிபதி என்ற பெருமையை அவர் பெற்றுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 8 நீதிபதிகளை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமனம் வழங்கினார். அவர்களில், இவர் ஒருவரே தமிழராவார்.

முல்லைத்தீவு 11

## தென்னிலங்கையில் நேற்றும் துப்பாக்கிசூட்டில் இருவர் பலி!

தென்னிலங்கையில் நேற்றும் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார்.

கம்பஹா - கட்டுகஸ்தர பிரதேசத்தில் நேற்று திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத ஆயுததாரிகளே இந்தத் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டு தப்பிச் சென்றனர்.

இந்த 11

## திருத்திய மின்சார சட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்தது

கொழும்பு, ஏப். 09

திருத்தப்பட்ட மின்சார சீர்திருத்த சட்டத்துக்கு அமைச்சரவை நேற்று திங்கட்கிழமை ஒப்புதல் அளித்துள்ளது.

மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தனது எக்ஸ் தளத்தில் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி திருத்தப்பட்ட மின்சார சீர்திருத்த 11

## மீண்டும் பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்படுவோம்!

### ஐக்கிய தேசியக் கட்சி சொல்கிறது

கொழும்பு, ஏப். 09

வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன் தவணையை மீள செலுத்தும் முறையை ரணில் விக்கிரமசிங்க அந்த நாடுகளுக்கு தெரிவித்திருக்கிறார். இதனால் அந்த முறையை யாராவது மாற்றியமைக்க முயற்சித்தால் மீண்டும் நாங்கள் அனைவரும் பிச்சை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்படுவோம் 11

- இலங்கை - இந்தியா இடையே பாலம் -

## ஆய்வு அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்படும்!

கொழும்பு, ஏப். 09

இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் பாலத்தை நிர்மாணிப்பது தொடர்பான ஆய்வு அறிக்கை இந்த வாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின்சிரேஷ்ட ஆலோசகர் சாகல ரத்நாயக்க தலைமையிலான இலங்கைப் பிரதிநிதிகள் இந்தியப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடியமையைத் தொடர்ந்து இந்த அறிக்கை தயாரிக்கப்பட் டுள்ளது.

சாகலவின் இந்திய பயணத்தில் 11

## தலைப்பிறை தீர்மானிக்கும் மாநாடு இன்று

கொழும்பு, ஏப். 09

ஹிஜ்ரி 1445 புனித ஷவ்வால் மாத தலைப்பிறையை தீர்மானிக்கும் பிறைக்குழு மாநாடு இன்று செவ்வாய்க்கிழமை மாலை மஹ்ரிப் தொழுகையை தொடர்ந்து 11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

# இப்படியும் நடக்கிறது

இந்தியாவில் பொதுத் தேர்தல் நடக்கவிருக்கின்றது. அதாவது, இந்திய பாராளுமன்றத்துக்கு தேர்தல். முதலில் இந்த மாதம் தமிழ்நாட்டிலுள்ள முப்பத்தி ஒன்பது தொகுதிகளுக்கும் முதல்கட்டமாக வாக்குப்பதிவு நடக்கின்றது. இலங்கை மக்கள் தொகையில் நான்கு மடங்கு பெரியது தமிழகம். அங்கு தொடங்கும் முதலாவது கட்டத் தேர்தலுடன் ஆரம்பமாகும் வாக்குப்பதிவு மூன்று மாதங்கள் தொடர்ந்து பல கட்டங்களாக நடக்கும். அதாவது சுமார் மூன்று மாதங்கள் செல்லும் வாக்குப்பதிவு முடிவடைவதற்கு.

இப்போது போலத்தான் ஐந்து வருடங்களுக்கு முன்னர் தேர்தல் நடந்துகொண்டிருந்த போது இலங்கையில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்தது. ஐ. எஸ். ஐ. எஸ். என்ற இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பு அந்தத் தாக்குதலுக்கு உரிமை கோரியிருந்தாலும் அதில் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கையைச் சேர்ந்தவர்கள்தான். அந்த சர்வதேச பயங்கரவாத அமைப்பில் இலங்கையர்களும் இருக்கிறார்கள் என்ற தகவல் நீண்டகாலமாகவே பேசப்பட்டு வந்ததுதான். அந்த அமைப்பில் இலங்கையர்கள் மாத்திரமல்லர், இந்தியர்களும் இருக்கிறார்கள் என்றும் பேசப்படுவதுண்டு. இந்த இஸ்லாமிய பயங்கரவாத இயக்கத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் உலகம் எங்கும்தான் உள்ளனர். அந்தத் தாக்குதலை செய்தவர்களுக்கும் அந்த அமைப்புக்கும் இடையே தொடர்பு இருந்ததா அல்லது இருக்கவில்லையா என்பது தெரியாவிட்டாலும் தாக்குதலுக்கு முன்னதாக அவர்கள் பதிவுசெய்த காணொலி ஒன்றில் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்றே தம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டனர். தாக்குதலை செய்தவர்கள் அவர்கள்தான் என்றாலும் அவர்களின் அந்த தாக்குதலுக்கு பின்னால் யாராவது இருந்தார்களா? என்பது பற்றியே இப்போதுவரை இலங்கையில் பேசப்பட்டு வருகின்றது.

அந்தத் தாக்குதல் சம்பவம் இலங்கையில் அதன் பின்னர் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஆதிக்கம் செலுத்தியது என்பதாலேயே அந்தத் தேர்தலில் வெற்றிபெற்ற கோட்டாபய அதன் பின்னணியில் இருந்தாரா என்ற கோணத்தில் பலரும் விமர்சிப்பதுண்டு. அதே போலத்தான். தாக்குதல் நடந்துகொண்டிருந்தபோது இந்தியாவிலும் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியிருந்தது. தாக்குதல் நடைபெற்ற பின்னர் நடந்த வாக்குப்பதிவுகளில் ஆளும் பாரதிய ஜனதா கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பெற்றிருந்ததும் அந்தக்காலத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

அதாவது, ஒரு சம்பவம் நடந்தால் அந்தச் சம்பவத்தால் பின்னர் பலன் அடைந்தவர்களுக்கும் அந்தச் சம்பவங்களுக்கும் இடையே தொடர்பு இருக்குமா என்ற கோணத்தில் கருத்துகள் முன்வைக்கப்படுவது இயல்பானதுதான்.

இப்போது நாம் இங்கே சொல்ல வருவது ஈஸ்டர் தாக்குதல் பற்றியது அல்ல. இந்தச் சம்பவம்போல தமிழ் அரசு கட்சிக்கு தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்களைப் பற்றி பேசுவோர் - அதனால் இலாபமடைபவர்கள் பற்றி ஏன் பேசுவதில்லை என்று கேட்டார் நண்பர் ஒருவர்.

தமிழ் அரசு கட்சிக்கு எதிரான வழக்கு இன்று அல்லது நாளை முடிவடைவதற்கான அறிகுறி எதனையும் காணவில்லை. வழக்கில் குற்றம்சாட்டப்பட்டதுபோல பொதுச் சபைக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டது தவறானது என்பதை ஏற்றுக்கொண்டு புதிதாக தொகுதிக் கிளையிலிருந்து பொதுச் சபைக்கு ஆட்களை தெரிவுசெய்ய இனி முயன்றாலும் தொகுதிக் கிளைகள் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு வழக்கு என்று வருமா என்பது தெரியவில்லை.

தற்போதே, கடைசியாக திருகோணமலையில் நடைபெற்ற விசாரணையின்போது கொழும்புக் கிளை நடவடிக்கைகளுக்கு எதிராக ஒருவர் மனு ஒன்றை இந்த வழக்குடன் சேர்க்குமாறு விண்ணப்பித்திருக்கிறார்.

இவையெல்லாம் அந்த வழக்கு இப்போதைக்கு முடிவடையுமா என்ற கேள்வியை பலருக்கும் ஏற்படுத்தியிருக்கின்றது. இந்த வருடம் முதலில் நடக்கும் ஜனாதிபதித் தேர்தலில் யார் வெற்றி பெற்றாலும், உடனடியாகவே பொதுத் தேர்தல் ஒன்றுக்கு அழைப்பு விடுப்பதற்கான சாத்தியம் தாராளமாகக் காணப்படுகின்ற நிலையில் கட்சி இப்படி நீதிமன்ற படிகளை ஏறி இறங்குவதை தவிர்க்க வேண்டும் என்று கட்சி நலன் விரும்பிகள் நினைத்தாலும் கட்சிக்காரர்கள் விடுவார்களா என்பது தெரியவில்லை. "நீதிமன்றம் நடந்து முடிந்த தெரிவுகளையும் கட்சி மாநாட்டையும்தானே நிறுத்தி வைத்திருக்கின்றது. கட்சி நடவடிக்கைகளை அல்லவே" என்று நண்பர் ஒருவர் வாதிட்டார். அதிலும் நியாயம் இருக்கின்றது தான்.

ஆனால், அதனையும் தேர்தல்கள் ஆணைக்குழு முன்பாக கட்சிக்காரர்களே கேள்விக்கு உட்படுத்தினால் கட்சி நடவடிக்கைகளை தேர்தல்கள் ஆணைக்குழுவும் நிறுத்திவைக்கலாம். முன்னர் ஒரு தடவை ஒரு பத்தியில் அதுபற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது ஞாபகம் இருக்கலாம்.

இந்த வழக்குகளின் பின்னால் யார் இருந்தாலும் அதனால் இப்போது நன்மையடைந்து கொண்டிருப்பவர் கட்சியின் தலைவராக இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கும் அண்ணன் மாவையர் தான்.

**- ஊர்க்குருவி.**

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் வாராந்த உதவிகள் வழங்கல்

வடமராட்சி, ஏப். 09

சந்நிதியான் ஆச்சிரமத்தின் வாராந்த உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ, கலை, பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் முற்பகல் 10:45 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் முதல் நிகழ்வாக பஞ்சபுராணம் ஓதப்பட்டு, பக்தி கீதங்கள் இசைக்கப்பட்டன. தொடர்ந்து ஆச்சிரமத்தின் வாராந்த தர்ம பணியாக ஒருவருக்கு மலசலகூடம் அமைப்பதற்கு நிதி உதவி அளிக்கப்பட்டது. அத்துடன், கெருடாவிலில் வருட பிறப்பு கொண்டாட்டத்துக்காக 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட்டது.




இந்நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், உறுப்பினர்கள், ஆச்சிரம தொண்டர்கள், இசைக் கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ஐ-02)

# கச்சதீவை அரசியலுக்காக பயன்படுத்துவதை தவிருங்கள்

## வட மாகாண கடற்றொழிலாளர் இணையம்

மன்னார், ஏப். 09

இந்திய மத்திய அரசிலும் தமிழகத்திலும் புதிதாக ஒரு நிலைப்பாடாக கச்சதீவு விடயம் தோன்றியுள்ளது. கச்சதீவை அரசியலுக்காக பயன்படுத்துவதை தமிழகமும் மத்திய அரசும் கைவிட வேண்டும் என்று வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளர் என். எம். ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் அந்த அமைப்பின் பணிமனையில் நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


இந்திய மத்திய அரசிலும் தமிழகத்திலும் புதிதாக ஒரு நிலைப்பாடாக கச்சதீவு விடயம் தோன்றியுள்ளது. இதை அவர்கள் அரசியலுக்கு பயன்படுத்தக் கூறிருந்தாலும் அங்குள்ள மீனவர்களை - குறிப்பாக சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளில் இருந்து மாற நினைக்கின்ற மீனவர்களை உற்சாகமூட்டி மீண்டும் மீண்டும் அவர்களை சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைக்கும் சட்டவிரோதமாக இலங்கை கடல் பகுதிக்குள் நுழைந்து மீன்பிடி நடவடிக்கையை முன்னெடுக்க ஆதரிப்பதாக உள்ளது.

அரசியல் நோக்கம் ஒருபுறம் இருந்தாலும் இலங்கையில் தனது ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட வேண்டும் என்று தமிழகத்திலும் இந்திய மத்திய அரசும் மிகவும் கவனமாக செயல்படுகிறது. கச்சதீவு விடயத்தை பல தடவை தமிழக அரசுதான் மேலோங்கச் செய்துள்ளது.

இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் ஒவ்வொரு கால கட்டத்திலும் கச்சதீவை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையை தொடர்ந்து வலியுறுத்தியது தமிழகம்.

எமது எல்லைக்குள் வந்து சட்ட விரோதமான இழுவை மடி தொழிலை முன்னெடுக்கக் கூடாது என்ற நிலைப்பாட்டில் எமது மீனவர்கள் தெளிவாக இருக்கின்றனர். எமது மீனவர்கள் முகங்கொடுக்கும் துன்பங்களும் போராட்டமும் அதனை வலியுறுத்துவனவாக உள்ளன - என்றார். (ஐ)

# வயலின் வித்துவான் ஜெயராமன் மறைவு



யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணத்தின் பிரபல வயலின் வித்துவான் அம்பலவாணர் ஜெயராமன் தனது 65 ஆவது வயதில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை காலமானார்.

யாழ்ப்பாணம் - நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் நேற்றுமுன்தினம் இசை நிகழ்ச்சியில் அவர் பங்கேற்றிருந்தார். எனினும், சுகவீனம் காரணமாக அவர் இடையிலேயே சென்றிருந்தார். இந்த நிலையில் அவர் காலமானார்.

அவரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. (ஐ)

# விடுமுறை தினத்தில் விசேட அஞ்சல் சேவை

கொழும்பு, ஏப். 09

அரச விடுமுறை தினமான எதிர்வரும் 12ஆம் திகதி அஞ்சல் பொதிகளை விநியோகிக்க விசேட சேவை முன்னெடுக்கப்படவுள்ளதாக அஞ்சல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அஞ்சல்மா அதிபர் டபிள்யூ. எம். ஆர். பி. சத்குமார விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு மற்றும் ரமழான் பண்டிகையுடன் வரும் நீண்ட வார இறுதி விடுமுறையில் வாடிக்கையாளர்களின் தேவை மற்றும் வசதியைக் கருத்தில் கொண்டு, இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, அரச விடுமுறை தினமான எதிர்வரும் 12ஆம் திகதி நாடளாவிய ரீதியில் விநியோகப் பிரிவுகளைக் கொண்ட அஞ்சல் மற்றும் உப அஞ்சல் நிலையங்கள் மூலம் வெளிநாட்டுப் பொதிகள் சேவை மற்றும் பொதுப்பொதிகள் விநியோகம் தொடர்பான விசேட சேவையொன்றை முன்னெடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
09.04.2024 செவ்வாய்க்கிழமை
சோபகிருது வருடம், பங்குனி 27

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இலகு தமிழ்த் தேசியம்

தமிழ்த் தேசியத்தை அடையாளப்படுத்தும் கட்சிகளை சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து திருச்சி சிறப்பு முகாமிலுள்ள கைதிகளை விடுவிக் குமாறு தமிழ்நாட்டு முதலமைச்சர் ஸ்டாலினுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்த னர். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அனைத்துக் கட்சிகளை சேர்ந்த பாராளு மன்ற உறுப்பினர்களும் கடிதம் ஒன்றில் கையெழுத்திட்டதால் இதனை ஒற்றுமை யின் அடையாளமாக நோக்கலாமா? இதனை ஒரு மனிதாபிமான நவடிக்கைக் கான ஆதரவு என்று நாம் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், இதே கட்சி கள் தமிழ் மக்களின் அரசியல் தீர்வுக்கான இடைக்கால மற்றும் நீண்டகால முன்னெடுப்புகள் என்று வருகின்றபோது ஒரு கடிதத்தில் ஒன்றுபடுவதில்லை - ஒன்றுபடப் போவதுமில்லை. தங்களுடைய நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டால் மட்டுமே தாங்கள் இணங்குவோம் என்று அடம்பிடிப்பார்கள்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதும் விடயத்தில் ஆரம்பத்தில் ஆறு கட்சிகளாக இணைந்து ஒரு கடிதத்தை அனுப்பியவர்கள் - பின்னர் இரண்டு கடிதங்களை அனுப்பினர். தாங்களும் இருக்கின்றோம் என்பதைக் காண்பிப்பதற்காக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) கட்சியும் ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தது. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்னையில் இந்தியாவின் ஆதரவை கோரும் விடயத்தில் மூன்று கடிதங்களை அனுப்பும் நிலையில்தான் தமிழ் கட்சிகள் இருக்கின்றன. இதேபோன்று, ஒருமுறை அனைத்தும் இணைந்து ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளருக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தன. ஆனால், அடுத்த கடிதத்தில் அடிபட்டன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியேறியது.

இங்கு அடிப்படையில் இருப்பது தேர்தல் நலன்கள் மட்டுமேயாகும். தேர்தல் நலன்களை தாண்டி சிந்தித்தால் மட்டுமே தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளால் ஒன்றுபட முடியும். அதற்கான வாய்ப்பு இப்போது கனிந்திருக்கின்றது. கடந்த பதினான்கு வருடங்களாக தமிழ் கட்சிகளை ஒன்றுபடுத்தும் செயல்பாடுகள் அனைத்துமே தோல்வியில்தான் முடிந்திருந்தன. இதற்குக் காரணம் ஒற்றுமை முயற்சியில் ஈடுபட்ட சிவில் சமூகக் குழுக்களால் கட்சிகள்மீது கட்டுப்பாடுகளை விதிக்க முடியவில்லை. கட்சிகளைக் கட்டுப்படுத்தும் வல்லமையுடன் சிவில் சமூகக் குழுக்கள் இருக்கவில்லை. இப்போதும் அதுதான் நிலைமை. சிவில் சமூகக் குழுக்களால் மக்கள் மத்தியில் செல்வாக்கை செலுத்த முடியுமென்றால் மட்டுமே அவற்றை நோக்கிக் கட்சிகள் இறங்கிவரும். ஆனால், அவ்வாறான தகுதி நிலையில் சிவில் சமூகக் குழுக்கள் எவையும் இல்லை.

இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் முயற்சியில் சில அடிப்படையான இணக்கப்பாடுகள் ஏற்பட்டிருக்கின் றன. இந்த இணக்கப்பாட்டை ஒரு மக்கள் உடன்பாடாக மாற்ற வேண்டும். அதற்கு சிவில் சமூகக் குழுக்கள் ஆற்றலுடன் செயலாற்ற வேண்டும். இங்கு எவரையும் எவரும் கட்டுப்படுத்த வேண்டியதில்லை. ஆனால், ஒருவருடன் ஒருவர் இணைந்து வெளிப்படைத் தன்மையுடன் பணியாற்ற வேண்டியிருக் கின்றது. கட்சிகள் தாங்கள் மட்டும் போதும் என்று எண்ணாமல் சிவில் சமூகத்து டன் இணைந்து பணியாற்ற வேண்டும். அப்போதுதான் இந்த விடயத்தை மக்கள் உடன்பாடாக மாற்ற முடியும்.

தமிழ் பொது வேட்பாளர் விடயம் என்பது அடிப்படையில் மக்கள் ஆணை யைக் கோரும் விடயமாகும். அவ்வாறான ஒரு விடயத்தை வெற்றிகொள்வதற்கு ஏற்றவாறான - பரந்தளவிலான வேலைத்திட்டம் தேவை. அதற்கு ஏற்றவாறான வளங்களும் தேவை. வெறும் அறிக்கைகளை வெளியிடுவது - வெறுமனே பகிஷ்கரிப்பு என்று அறிவித்துவிட்டு அமைதியாக இருப்பது போன்று இலகு தேசி யமல்ல இது. உண்மையில், தமிழ் பொது வேட்பாளர் விடயத்துக்காக உழைப் பதுதான் உண்மையான தமிழ்த் தேசிய பணியாகும்.

# சஜித்தின் ஆட்சியில் 48 மணி நேரத்திற்குள் மலையகத்திற்கான ஜனாதிபதி செயலணி

## மனோ கணேசன் கூறுகிறார்



*கொழும்பு, ஏப். 09*

*தமிழ் முற்போக்கு கூட்டணி தூங்கிக் கொண்டிருக்கும் அரசியல் கட்சியல்ல, மலையக மக்கள் நலனுக்காக என்றும் விழித்தெழுந்து சேவை செய்யும் கட்சி என்பதை எமது கடந்த கால அரசியல் செயற்பாடுகள் மூலமாக நிருபித்து உள்ளோம். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் உருவாகும் அரசாங்கத்தின் ஊடாக மலையக மக்கள் நலன் பேணும் வகையில் 48 மணித்தியாலயத்தில் ஜனாதிபதி செயலணி உருவாக்கப்படும் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவிக்கின்றார்.*

*பதுளை தபாலகக் கட்டடத் தொகுதியின் கேட்போர் கூடத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பதுளை மாவட்ட பாராளுமன்ற தேர்தல் வேட்பாளராகவும், பங்காளி கட்சியான மலையக மக்கள் முன்னணியின் பதுளை மாவட்ட அமைப்பாளராகவும் சமூக சேவையாளரும், வர்த்தகருமான பகிபாலச்சந்திரனை அறிமுகம் செய்து நியமனம் வழங்கும் பொது கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.*

*அங்கு மேலும் தெரிவிக்கையில்-*

*எமது கூட்டணிக்குள் எட்டப்பட்ட புரிந்துணர்வுக்கு அமைய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆசனம் மலையக மக்கள் முன்னணிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் எமது கூட்டணியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் இன்று எமது கட்சியில் இல்லை.*

*இவ்வருடம் தேர்தல் வருடமாகும். தேர்தல் கலண்டர் படி முதலில் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்படவேண்டும். யார் ஜனாதிபதியாக தெரிவானாலும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும். அவ்வாறு நடத்தப்படும் தேர்தலில் எமது கூட்டணி சார்பாக போட்டியிடவுள்ள மண்ணின் மைந்தனான பகிரதனை வெற்றி பெற செய்யவேண்டும்.*

*இம்மாவட்டத்தில் நாங்கள் அரசியல் தலைமையை உருவாக்கியுள்ளோம். அதை நீங்கள் தக்கவைத்துக் கொள்ள வேண்டும்.*

*மக்கள் பணி செய்ய வயது ஒரு தடையல்ல. வயது என்பது இலக்கம் வாழ்க்கை என்பது இயக்கம் இதை மனதிற் கொண்டு நேர்மை,துணிச்சல், தூரநோக்கு மற்றும் அர்ப்பணிப்பு இருந்தால் நாம் சாதிக்க முடியும். கடந்த பொதுத் தேர்தலில் கொழும்பு, கம்பஹா, கண்டி, நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் போட்டியிட்டு நாம் 4 லட்சத்து 13 ஆயிரத்திற்கும் அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுள்ளோம். இவ்வாக்குகள் நாட்டின் ஜனாதிபதியை தீர்மானிக்கும் வாக்குகளாக அமையும். எதிர்வரும் தேர்தலில் பதுளை மாவட்டத்தில் உங்கள் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும்.*

*எமது ஆட்சியில் உருவாக்கப்படவுள்ள மலையகத்திற்கான செயலணி மூலம் பெருந்தோட்ட மக்களை தொழில் முனைவர்களாவும், சிறுதோட்ட உரிமையாளர்களாவும் மாற்றத் தேவையான துரித நடவடிக்கைகளை எடுக்க உள்ளோம். எம் மக்கள் என்றும் தினக்கூலிகளாக இருப்பதை அனுமதிக்க முடியாது. அவர்களை தன்மானம், சுயகௌரவம் உள்ளவர்களாக நிச்சயம் மாற்றி காட்டுவோம்-என்றார்.*

*(அ)*

# புத்தாண்டை முன்னிட்டு பொருட்கள் விலை குறைப்பு

*கொழும்பு, ஏப். 09*

*எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டை முன்னிட்டு லங்கா சதொச நிறுவனம் பல அத்தியாவசிய நுகர்வு பொருட்களின் விலைகளைக் குறைத்துள்ளது.*


*இதன்படி, நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் இந்த விலைகளை குறைக்கப்பட்டன.*

*ஒரு கிலோ செத்தல் மிளகாய் 300 ரூபாய் குறைக்கப்பட்டு 850 ரூபாயாக விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*சீனாவில் இருந்து இறக்குமதியாகும் வெங்காயம் கிலோ 120 ரூபாய் குறைக்கப்பட்டு 375 ரூபாயாகவும், பாகிஸ்தான் வெங்காயம் 50 ரூபாய் குறைந்து 445 ரூபாயாகவும் ஒரு கிலோ உள்ளி 15 ரூபாய் குறைக்கப்பட்டு 680 ரூபாயாகவும் ஒரு கிலோ உருளைக் கிழங்கு 10 ரூபாய் குறைக்கப்பட்டு 165 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.*

*சிவப்பு பருப்பு 7 ரூபாயாலும் வெள்ளை அரிசியின் விலையை 3 ரூபாயாலும் குறைக்க லங்கா சதொச தீர்மானித்துள்ளது. (ஐ)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஏப்ரல் - 09 செவ்வாய்க்கிழமை**
**சோபகிருது வருடம் - பங்குனி 27**

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 07.30 - 09.00 |
| ராகு காலம் | : | 03.00 - 04.30 |
| திதி | : | பிரதமை |




**மேடம்**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து நீங்கும். பிள்ளைகளை அன்பால் அரவணைத்துப் போங்கள். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**இடபம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். திடீரென்று அறிமுகமாகுபவரால் பயனடைவீர்கள். சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**மிதுனம்**
உணர்ச்சிப் பூர்வமாக பேசுவதை விட்டு அறிவுப் பூர்வமாகப் பேசி செயல்படுவீர்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். மரியாதை கூடும். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். வியாபாரத்தில் ஏற்பட்ட இழப்புகளை சரி செய்வீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் விவாதங்களை தவிர்ப்பது நல்லது. வியாபாரத்தில் வேலையாட்களுடன் போராட வேண்டி இருக்கும். அதிகாரி உங்களை புரிந்துகொள்ள மாட்டார். கவனம் தேவையான நாள்.

**கன்னி**
சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். உத்தியோகத்தில் புது பொறுப்பை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**துலாம்**
உற்சாகமாக இருப்பீர்கள். உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். அமோகமான நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிரார்த்தனைகளை குடும்பத்தினருடன் நிறைவேற்றுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். புதுமை படைக்கும் நாள்.

**தனுசு**
பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**மகரம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும். தைரியம் கூடும்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனகசப்புகள் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். புது வாய்ப்புகள் தேடி வரும். நன்மை நடக்கும் நாள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில வேலைகளை உங்கள் மேற்பார்வையிலேயே முடிப்பது நல்லது. உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். விழிப்புணர்வு தேவைப்படும் நாள்.

# சீனப் பிரச்னையை எழுப்பியதாலேயே கச்சதீவு குறித்து பா. ஜ. க. பேசுகிறது

## கனிமொழி எம். பி. சாடல்

தூத்துக்குடி, ஏப். 09

சீன எல்லைப் பிரச்னை குறித்து எதிர்க்கட்சிகள் கேள்வி எழுப்பிய பின்னர் மத்தியில் ஆளும் பா. ஜ. க. அரசு கச்சதீவு விவகாரத்தை திசைதிருப்பும் அரசியலாகக் கையில் எடுத்துள்ளது என தி. மு. க. எம். பி. கனிமொழி தெரிவித்துள்ளார்.

இத்தனை ஆண்டு காலம் பாராளுமன்றத்தில் கச்சதீவு விவகாரத்தை எழுப்பியபோதெல்லாம் அமைதி காத்த பா. ஜ. கவுக்கு தேர்தல் வந்துவிட்டதாலும் சீன எல்லைப் பிரச்னையை எதிர்க்கட்சிகள் எழுப்புவதாலும் கச்சதீவு பிரச்னை நினைவுக்கு வந்துவிட்டது. மத்தியில் ஆளும் பா. ஜ. க. அரசு கச்சதீவு விவகாரத்தை




திசைதிருப்பும் அரசியலாகக் கையில் எடுத்துள்ளது - என்றும் அவர் கூறினார். (ஐ)

# பகை கடந்த அன்பு காட்டிய தி. மு. க. - அ. தி. மு.கவினர்!

திண்டுக்கல், ஏப். 09

திண்டுக்கல்லில் நடந்த பாஸ்கு திருவிழாவில் பங்கேற்க வந்த தி. மு. க. அமைச்சர் ஐ. பெரியசாமியிடம், அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தனது மகனை காலில் விழுந்து ஆசிபெறச் செய்தார். இது இருவருக்கும் இடையிலான அரசியலையும் கடந்த நட்பை வெளிப்படுத்தியது.

இந்த விழாவில் அமைச்சர் ஐ. பெரியசாமி, மார்க்சிஸ்ட் வேட்பாளர் சச்சிதானந்தம், அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர்கள் திண்டுக்கல் சி. சீனிவாசன், நத்தம் ஆர்.விசுவநாதன், எஸ். டி. பி. ஐ. வேட்பாளர் முகமது முபாரக் ஆகியோர் வந்திருந்தனர். அனைவரும் ஒன்றாக ஒரே இடத்தில் அமர்ந்து கட்சி பாகுபாடின்றி பேசிக்கொண்டிருந்தனர்.

அப்போது முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தனது மகன் சதீஷை அமைச்சர் ஐ. பெரியசாமிக்கு அறிமுகப்படுத்தி, 'பெரியப்பா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்கு' என்றார். அவரின் மகன் சற்றே தயங்கி முழங்காலைத் தொட்டு வணங்கினார். 'நன்றாக காலில் விழு' என முன்னாள் அமைச்சர் கூறியதையடுத்து மீண்டும் அமைச்சர் ஐ. பெரியசாமியின் காலைத் தொட்டு ஆசிபெற்றார்.

இவர்களின் செயல் அங்கிருந்தவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்ததுடன், அவர்களின் செயலுக்கு வரவேற்பும் தெரிவித்தனர். (ஐ)

# காங்கிரஸுடனான 14 வருட கூட்டணி காலத்தில் தி. மு. க. செய்தது என்ன?

## கேட்கிறார் எடப்பாடி பழனிசாமி

சென்னை, ஏப். 09

மத்தியில் காங்கிரஸுடன் 14 ஆண்டுகள் கூட்டணியில் இருந்த தி. மு. க. தமிழகத்துக்கு செய்தது என்ன? என்று அ. தி. மு. க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பியுள்ளார்.

"செல்லும் இடங்களில் எல்லாம் எடப்பாடி பழனிசாமி துப்பாக்கிச் சூடு நடத்தினார் என்று கூறி வருகின்றனர். தி. மு. க. ஆட்சியில், கருணாநிதி முதலமைச்சராக இருந்தபோது விவசாயத்துக்கான மின்சார கட்டணத்தை ஒரு ரூபாய் குறைக்க வேண்டும் என்று தமிழ்நாடு முழுவதும் விவசாயிகள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது கோவையில் அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர். விவசாயிகளை குருவியை சுடுவது போல் சுட்டதுதான் தி. மு. க. அரசு.

மத்தியில் காங்கிரஸுடன் 14 ஆண்டுகள் கூட்டணியில் இருந்த தி. மு. க. தமிழகத்துக்கு செய்தது என்ன? ஆட்சி அதிகாரத்துக்கு அ. தி. மு. க. என்றைக்கும் அடிபணிந்தது கிடையாது. தமிழகம் இந்தியாவிலேயே பின்னோக்கிச் செல்கிறது. திமுக ஆட்சி தான் அதற்கு காரணம் - என்றார். (ஐ)

# சமூகநீதியை பாதுகாக்க போராடுபவர்கள் நாமே!

## சீமான் சொல்கிறார்

தருமபுரி, ஏப். 09

சமூகநீதியை பாதுகாக்க போராடிக் கொண்டிப்பவர்கள் நாம் தமிழர் கட்சியினர் என்று அந்தக் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

தருமபுரியில் பிரசாரத்தில் ஈடுபட்ட அவர் பேசியவை வருமாறு,

"நீண்டகாலமாக நாங்கள் தனித்துப் போட்டியிடுகின்றோம் என்பதை கவனித்து இருப்பீர்கள். எங்களது அரசியல் முழுக்க முழுக்க வேறானது. ஆணுக்குப் பெண் சமமானவர்கள் என்றார்கள். நாங்கள் ஆணும் பெண்ணும் சமம் என்கிறோம். சட்டசபை தேர்தல், உள்ளாட்சி தேர்தல், பாராளுமன்ற தேர்தல் என அனைத்திலும் நம் குல பெண்களுக்கு சம வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். சமூக நீதியை காப்பாற்றுவதற்காக போராடிக் கொண்டிருக்கும் பிள்ளைகள் நாங்கள். அதன் அடிப்படையிலேயே வாய்ப்புகள் கொடுக்கிறோம்." - என்றார். (ஐ)

# பிரசாரத்திலிருந்து ஒதுங்குகிறார் நடிகை குஷ்பு

சென்னை, ஏப். 09

எலும்பு முறிவு பிரச்னையால் மக்களவைத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட முடியவில்லை என்றும், பிரச்சாரத்தில் ஈடுபடுவதில் இருந்து ஓய்வு அளிக்குமாறும் கோரி பா. ஜ. க. தேசிய தலைவர் ஜே. பி. நட்டாவுக்கு, தேசிய செல்குழு உறுப்பினர் நடிகை குஷ்பு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், மருத்துவர்கள் எனது உடல்நிலையை மனதில்கொண்டு, பிரச்சாரத்தில் ஈடுபடவேண்டாம் என அறிவுறுத்தியுள்ளனர். பிரச்சாரத்தில் ஈடுபட்டால், அது மேலும் எனது உடல் நிலையை மோசமடைய செய்யும் என எச்சரித்துள்ளனர். பா. ஜ. கவின் அர்ப்பணிப்புள்ள தொண்டன் என்ற முறையில் எனது மருத்துவரின் அறிவுரைக்கு எதிராக வலி மற்றும் வேதனை இருந்த போதிலும் என்னால், முடிந்தவரை உழைத்து பிரசாரம் செய்தேன்.

ஆனாலும், என்னால் தொடர்ந்து பிரச்சாரத்தில் ஈடுபட முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்காக என்னை மன்னிக்கவேண்டும் - என்று கூறியுள்ளார். (ஐ)

# பிரதமர் மோடி இன்று பிரசாரம்

சென்னை, ஏப். 09

இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று சென்னையில் வாகன பேரணி பிரசாரத்தில் ஈடுபடவுள்ளார். இதைத் தொடர்ந்து, ஐந்தடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பாராளுமன்றத் தேர்தல் தமிழ்நாட்டில் எதிர்வரும் 19ஆம் திகதி வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. கட்சிகள் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டில் 5 தடவைகள் தமிழ்நாடு வந்துள்ள மோடி, ஆறாவது முறையாக இன்று தமிழ்நாடு வருகிறார்.

இரு நாட்கள் தங்கியிருக்கும் அவர் பா. ஜ. க. வேட்பாளர்களை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடுகிறார். இன்றைய தினம் வாகனப் பேரணியிலும் பிரதமர் பங்கேற்பார்.

பிரதமரின் வருகையை ஒட்டி ஐந்தடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 22 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடவுள்ளனர்.

# பொதுஜன பெரமுனவின் முக்கிய கூட்டம் இன்று!

## ஜனாதிபதி வேட்பாளர் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்படலாம்

கொழும்பு, ஏப். 09

**சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய கூட்டமொன்று இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் அரசியல் பீடக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் ஸ்தாபகத் தலைவர் பசில் ராஜபக்ச உள்ளிட்டவர்களும் பங்கேற்கவுள்ளனர்.இந்தக் கூட்டம் வழமையாக கட்சியின் எதிர்காலச் செயற்பாடுகள் சம்பந்தமாக கலந்துரையாடுவதற்காகவே கூட்டப்படவுள்ளது

எனினும், கட்சியின் கடந்த கூட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் சம்பந்தமாக கட்சியின் அங்கத்தவர்கள் கருத்து வெளியிடுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன.

அந்தக் கட்டுப்பாடுகளை மீறி தொடர்ச்சியாக சில உறுப்பினர்கள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றமை தொடர்பில் இந்தக் கூட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது.அத்துடன், கட்சியின் உறுப்பினர்கள் வேறு கட்சிகளுடன் இணைந்து செயற்படுகின்றமை தொடர்பிலும் தீர்மானங்கள் எடுப்பது குறித்து ஆராயப்படவுள்ளது.

அதேபோன்று, ஜனாதிபதி ரணிலுக்கும், பசில் ராஜபக்சவுக்கும் இடையிலான சந்திப்பிலும் இணக்கப்பாடுகள் எட்டப்படாமையை அடுத்து அது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது.

மேலும், தேசிய அமைப்பாளராக நாமல் ராஜபக்ச நியமிக்கப்பட்டதன் பின்னர் கட்சியின் செயற்பாடுகள் சம்பந்தமாகவும் ஆராயப்படவுள்ளது-என்றார்.

(அ)



# புத்தாண்டு இனிப்புப் பண்டங்கள் தயாரிப்பதற்கு 2 மடங்கு செலவு!

கொழும்பு, ஏப். 09

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த வருடம் புத்தாண்டுக்கான இனிப்புப் பண்டங்களை தயாரிப்பதற்கு 02 மடங்கு செலவு ஏற்படும் என ஆய்வொன்றில்தெரியவந்துள்ளது.

வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

எனினும் கடந்த ஆண்டை விட, புத்தாண்டுக்கான இனிப்புக்களை தயாரிப்பதற்கான மூலப்பொருட்களின் விலை 02 சதவீதத்தினால் குறைவடைந்துள்ளதாக அந்த நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

பாற்சோறு, பலகாரங்கள், கேக் மற்றும் வாழைப்பழங்கள் உள்ளிட்டவற்றின் விலைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டுள்ளது.

(அ)

# பேருந்து விபத்தில் மாணவன் படுகாயம்

வவுனியா, ஏப். 09

வவுனியா, மகிழங்குளம் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மாணவன் ஒருவன் பேருந்தில் மோதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா பொது வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது .

பத்தினியார், மகிழங்குளம் நோக்கி வந்த பேருந்து, அதே திசையில் பாடசாலைக்கு சைக்கிளில் சென்ற மாணவன் மீது மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும் இச் சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர்.

(அ)

# அன்னதானம் உட்கொண்ட 60 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 09

நல்லத்தண்ணி-வாழமலை பகுதியில் உணவு ஒவ்வாமை காரணமாக 60 பேர் மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலயமொன்றில் இடம்பெற்ற திருவிழாவின்போது நேற்று முன் தினம் மாலை பக்தர்களுக்கு வழங்கப்பட்ட அன்னதானத்தை உட்கொண்டமையினாலேயே ஒவ்வாமை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த சிலர் மேலதிக சிகிச்சைகளுக்காக கிளங்கன் வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக வைத்தியசாலை தகவல்கள் குறிப்பிட்டன.

அத்துடன், பலர் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நல்லத்தண்ணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# போலி வீசாவில் இத்தாலி செல்வதற்கு முயன்ற திருமலை இளைஞன் கைது!

கொழும்பு, ஏப். 09

போலியான வெளிநாட்டு கடவுச்சீட்டு மற்றும் விமான டிக்கெட்டை பயன்படுத்தி இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

திருகோணமலையைச் சேர்ந்த 27 வயதுடைய ஒருவரே விமான நிலைய குடிவரவு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டார்.

இவர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் சார்ஜாவுக்கு செல்வதற்காக கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தார்.

அவரது பயண ஆவணங்கலில் சந்தேகமடைந்து நடத்தப்பட்ட மேலதிக பரிசோதனையில், அவர் போலி ஆவணங்களுடன் செல்ல முயன்றது தெரியவந்தது.

போலியான இலங்கை கடவுச்சீட்டை இலங்கையில் உள்ள இத்தாலிய தூதரகத்திற்கு அனுப்பி அவர்களிடம் சிக்காமல் இத்தாலிய வதிவிட விசாவை பெற்றுக்கொண்டமை தெரியவந்துள்ளது.

இந்த போலி கடவுச்சீட்டைப் பயன்படுத்தி இத்தாலிக்குள் நுழைந்தவுடன் இந்த ஏற்பாடுகளை ஏற்பாடு செய்த தரகருக்கு 95 இலட்சம் ரூபா பணம் தருவதாக உறுதியளித்ததன் பேரில் தான் இந்த விமானத்தை திட்டமிட்டதாக குடிவரவு அதிகாரிகளிடம் அந்த இளைஞன் தெரிவித்துள்ளார்.

# சு.க. தலைமையகம் மூடியதற்கும் பொலிஸாருக்கும் தொடர்பில்லை

## கூறுகிறார் பொலிஸ் பேச்சாளர்

கொழும்பு, ஏப். 09

கொழும்பு 10, டார்லி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சியின் தலைமையக கட்டடத்தை மூடியதற்கும் பொலிஸாருக்கு எவ்வித தொடர்பும் இல்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தலைமைச் செயலக கட்டடத்தில் இருந்து காணாமல் போன கோப்புகள் தொடர்பான புகார் தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக, கட்சி நிர்வாகிகள் கதவை பூட்டியுள்ளதாகவும், திறக்கும் வரை மட்டுமே காவல் துறையினர் பாதுகாப்பு அளித்துள்ளனர் என்றார். இது தொடர்பில் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் சாரதி துஷ்மந்த மித்ரபால வெள்ளிக்கிழமை காலை மருதானை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அண்மைக்காலமாக பதவிகளில் இருந்து நீக்கப்பட்ட கட்சியின் முன்னாள் பொறுப்பாளர்கள் பலர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் பின்னர் மேற்படி கோப்புகள் காணாமல் போயுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சனிக்கிழமை காலை கட்சி உறுப்பினர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் குழு ஒன்று தலைமையக வளாகத்திற்கு வந்தபோது, அது பூட்டப்பட்டிருந்ததுடன், எந்தவொரு நபரும் அந்த வளாகத்திற்குள் நுழைய அனுமதிக்கப்படவில்லை.

இதன்படி, முன்னாள் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தஹாம் சிறிசேன மற்றும் பதில் பொதுச் செயலாளர் மித்ரபால ஆகியோருடன் கூடிய உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தை மூடும் நடவடிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கட்சித் தலைவர் பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சனிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட கட்சி உறுப்பினர்களுக்கு கையை அசைத்துக்கொண்டு தனது வாகனத்தில் தலைமையக கட்டடத்தை கடந்து சென்றுகொண்டிருந்ததை அவதானிக்க முடிந்தது.




பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பொலிஸ் ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார். புகாரின் பேரில் விசாரணையை தொடங்குவதற்காக, கட்டடத்தின் கதவுகளை யார் பூட்டியி ருந்தாலும் திறக்கும் வரை பொலிஸாரும் காத்திருப்பதாக அவர் கூறினார்.

அரசியல் விவகாரமான உட்கட்சி பூசல்கள் குறித்து பொலிஸாருக்கு எந்த கவலையும் இல்லை, ஒரே கவலை திருட்டு தான். பொலிஸ் பாதுகாப்பை வழங்குவதன் மூலம் மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடையே மோதல் ஏற்படாமல் தடுக்க முடியும் என பிரதி பொலிஸ் மா அதிபர் தல்துவ தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 6ஆம் திகதியுடன் முடிவடைந்த ஒரு வார காலப்பகுதிக்குள் சுதந்திரக் கட்சியைச் சுற்றி தொடர் அரசியல் காட்சிகள் இடம்பெற்றன.

கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மார்ச் 30 ஆம் திகதி நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவண்ண மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் முறையே கட்சியின் சிரேஷ்ட உப தலைவர், பொருளாளர் மற்றும் தேசிய அமைப்பாளர் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது. அவர்களுக்குப் பதிலாக முன்னாள் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, மேல் மாகாண முன்னாள் அமைச்சர் ஹெக்டர் பெத்மகே மற்றும் சுதந்திரக் கட்சியின் மஹியங்கனை தொகுதி அமைப்பாளர் கே.பி. குணவர்தன நியமிக்கப்பட்டனர்.

எவ்வாறாயினும், திஸாநாயக்க, அமரவீர மற்றும் அழகியவண்ண ஆகியோரை நீக்குவதற்கு சுதந்திரக் கட்சியின் செயல் குழுவிற்கு இடைக்காலத் தடையுத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த திங்கட்கிழமை பிறப்பித்தது.

இதேவேளை, கட்சியின் தலைவராக செயற்படும் முன்னாள் ஜனாதிபதி சிறிசேனவை இடைநிறுத்தி கொழும்பு மாவட்ட நீதிமன்றம் கடந்த வியாழக்கிழமை இடைக்காலத் தடை விதித்துள்ளது. சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறிசேனவுக்கு எதிரான உத்தரவுக்குப் பிறகு, மார்ச் 30 அன்று நீக்கப்பட்ட மூன்று நிர்வாகிகளும் கட்சியின் தலைமையகத்திற்குச் சென்று செய்தியாளர் சந்திப்பு நடத்தினர். இந்த செய்தியாளர் சந்திப்பைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட கோப்புகள் காணாமல் போனதாக தற்காலிக பொதுச் செயலாளர் புகார் அளித்திருந்தார்.

(அ)

# மியன்மாரில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 48 இலங்கையரை மீட்பது பெரும் சவால்!

## குறித்த பகுதி ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில்

கொழும்பு, ஏப். 09

**மியன்மார் - மியாவாடி இணையவழி குற்றச்செயல்களில் ஈடுபடுவோரால் தடுத்துவைக்கப்பட்டுள்ள 48 இலங்கையர்களை மீட்பது சவாலானது என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

குறித்த பகுதி ஆயுதக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளமையினால் இவ்வாறானதொரு நிலை காணப்படுவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபடுவோரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த 56 இலங்கையர்களில் 8 பேர் அண்மையில் மீட்கப்பட்டனர்.

இருப்பினும், மீட்கப்பட்டவர்களை மியாவாடி வழியாக தரைமார்க்கமாக யங்கூன் நகருக்கு கொண்டு செல்வது சவாலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், தாய்லாந்து வழியாக அவர்களை இலங்கைக்கு அனுப்புவதற்கான ஆவண வேலைகள் இடம்பெற்று வருவதாக குறிப்பிடப்படுகின்றது.

இந்த நிலையிலே, எஞ்சியுள்ள 48 இலங்கையர்களை மீட்பது சவாலானதாக மாறியுள்ளது என மியன்மார் அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, அவர்களை மீட்பதற்கு மியன்மார் இராணுவ அரசாங்கம் மேலும் கால அவகாசம் கோரியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த விடயத்தில் மியன்மார் அரசாங்கத்தை ஈடுபடுத்துவதற்கான அனைத்து இராஜதந்திர நடவடிக்கைகளையும் இலங்கை முன்னெடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, மியாவாடி பகுதியில் பல்வேறு மோசமான நடவடிக்கைகளில் ஈடுபடும் பல இலங்கையர்கள் மீண்டும் இலங்கைக்கு வர விருப்பம் தெரிவிக்கவில்லை என குறிப்பிடப்படுகிறது. (அ)

# எரிபொருள் தாங்கி கவிழ்ந்து விபத்து!

கொழும்பு, ஏப். 09

மாத்தளை - லக்கல, வில்கமுவ பிரதேசத்தில் எரிபொருள் தாங்கி ஒன்று கவிழ்ந்ததில் மண்ணெண்ணெய் வீதியெங்கும் வழிந்தோடியுள்ளதாக வில்கமுவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தம்புள்ளையில் இருந்து வில்கமுவ நோக்கி பயணித்த இலங்கை கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான இந்த எரிபொருள் தாங்கி எல்வானா மலை சரிவில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

எரிபொருள் தாங்கி கவிழ்ந்ததில் மண்ணெண்ணெய் வீதியில் கொட்டி வீணானதுடன், கொட்டிய மண்ணெண்ணெயை அருகில் இருந்த மக்கள் சேகரித்தனர்.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை குறிப்பிடத்தக்கது. (அ)




# சம்பள முரண்பாட்டை ஆராய விரைவில் விசேட ஆணைக்குழு

கொழும்பு, ஏப். 09

அரச துறையில் பல்வேறு பிரிவுகளிலும் நிலவும் சம்பள முரண்பாடு மற்றும் சம்பள நெருக்கடி நிலைகளை நிவர்த்தி செய்யும் வகையில் சம்பள முரண்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான ஆணைக்குழுவொன்றை உருவாக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை நிதியமைச்சு மேற்கொண்டு வருகிறது.

மத்திய வங்கியின் அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுக்கான சம்பள அதிகரிப்பு தீர்மானத்தையடுத்து அரச துறையின் பல்வேறு பிரிவுகளிலும் சம்பள முரண்பாடு தொடர்பான நெருக்கடிகள் உருவாகியதுடன் அதனை நிவர்த்தி செய்யும் வகையிலேயே மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்படவுள்ளது. (அ)

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதில் தாமதநிலை

ප්‍රවාහන හා මහාමාර්ග අමාත්‍යාංශය
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
MINISTRY OF TRANSPORT AND HIGHWAYS

கொழும்பு, ஏப். 09

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கும் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த வீரசிங்க அது தொடர்பில் தெரிவிக்கையில்-

சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடும் அட்டைகள் இல்லாத காரணத்தாலேயே அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் நடவடிக்கைகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு சுமார் ஐந்து இலட்சம் சாரதி அனுமதிப் பத்திரங்கள் வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. இந்த தாமதம் காரணமாக சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க மேலும் இரண்டு மாத காலங்கள் எடுக்கும்-என்றார். (அ)

# மலையக நடன கலையை பாதுகாக்க விரைவில் குழு

கொழும்பு, ஏப். 09

மலைநாட்டு நடனக் கலையைப் பாதுகாத்து, தொடர்ந்து பேணுவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆராய குழுவொன்று நியமிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கலாசார அலுவல்கள் அமைச்சு, கட்புல அரங்கேற்றக் கலைகள் பல்கலைக்கழகம் உள்ளிட்ட நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமிக்கப்படும் இந்தக் குழுவில் கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரதிநிதி ஒருவரை இணைத்துக் கொள்ள ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி, மலைநாட்டு கலை மையமொன்றை உருவாக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கண்டி பாரம்பரிய நடன கலைஞர்களைச் சந்தித்த போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

கண்டியின் பாரம்பரிய நடனக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது குறித்து ஆராயுமாறும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்காரவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனை வழங்கினார்.



மலைநாட்டு நடனக்கலை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரபல்யமடைந்துள்ள போதிலும் பாரம்பரிய மரபுகளை பின்பற்றாமை தொடர்பில் கவனம் செலுத்திய ஜனாதிபதி, புதிய குழு அதனை ஆராய்ந்து பொருத்தமான முறையைத் தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

கண்டி பாரம்பரிய நடனக் கலைஞர்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து அவர்களுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி, சப்ரகமுவ நடனம் போன்ற இந்நாட்டின் பாரம்பரியக் கலைகளைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோரும் கலந்துகொண்டனர். (அ)

# வரி செலுத்தாது கொண்டுவந்த பொருட்களுடன் இரு வர்த்தகர்கள் விமான நிலையத்தில் கைது!

கொழும்பு, ஏப். 09

சுங்க வரி செலுத்தாமல் சட்டவிரோதமாகக் கொண்டு வரப்பட்ட 50 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களுடன் இரு வர்த்தகர்கள் கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஜா-எல, இரத்தினபுரி ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 58 மற்றும் 50 வயதுடையவர்களாவர்.

இவர்கள் இருவரும் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்நிலையில், இந்த இரு வர்த்தகர்களிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் அவர்கள் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 56 விஸ்கி மதுபானப் போத்தல்கள் மற்றும் 12 மடிக்கணினிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ)

# 10 கிலோ வெடி மருந்துடன் பூநகரியில் ஒருவர் கைது!

கிளிநொச்சி, ஏப். 09

கிளிநொச்சி - பூநகரி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவர் ஆபத்தான வெடிமருந்தை, மோட்டர் சைக்கிளில் கடத்திச் செல்வதாக பூநகரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் பொலிஸார் விசேட நடவடிக்கையை மேற்கொண்டு மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரை மடக்கிப் பிடித்து கைது செய்தனர்.

குறித்த நபரிடம் இருந்து 10 கிலோ நிறையுடைய சி - 4 ரக வெடிமருந்தை பொலிஸார் மீட்டனர்.

அதனை அடுத்து குறித்த நபரை கைதுசெய்து பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எச்.ஐ.வி தொற்றாளர்கள் எண்ணிக்கையில் உயர்வு

## கொழும்பில் 40 வீதம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 09

**நாடளாவிய ரீதியில் கடந்த மூன்று மாதங்களில் மாத்திரம் 695 எச்.ஐ.வி புதிய தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டப் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் ஜானகி விதான தெரிவித்தார்.**

எச்.ஐ.வி அதிகரிப்பு தொடர்பாக கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த 2023ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கை 14 விகிதம் அதிகரித்துள்ளது. இது மிகவும் பாரதூரமான விடயமாகும்.

மேலும் கொழும்பு மாவட்டத்தை பொருத்தவரை பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் கீழ், செயற்படும் சிகிச்சை நிலையங்களில் பதிவாகும் எச்.ஐ.வி தொற்றாளர்களின் எண்ணிக்கையில் 40 விகித அதிகரிப்பை காணக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக இளம் பருவத்தினரிடையே பாலியல் நோய் தொடர்பில்போதியளவிலான புரிந்துணர்வு இல்லாமை இதற்கு பிரதான காரணமாக உள்ளது.

ஆகையால், இது தொடர்பாக இளம் வயதினர் மற்றும் பாடசாலை மாணவர்களிடையே தெளிவான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

சில வேளைகளில் தனக்கு பாலியல் நோய் தொற்றுள்ளதா என்பதை கண்டறிய தேசிய பாலியல் நோய் மற்றும் எயிட்ஸ் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வலையமைப்பை பயன்படுத்தி சுய பரிசோதனையை செய்து கொள்வதோடு தேவையான உபகரணங்களையும் பெற்றுக் கொள்ளலாம்-என்றார்.

(அ)

# கை, கால் கட்டிய நிலையில் சடலம்; விஹாரையின் பாதுகாவலர் கைது!

கொழும்பு, ஏப். 09

கண்டி பிரதேசத்தில் உள்ள விஹாரையொன்றின் கராஜிலிருந்து ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் மெனிக்ஹின்ன பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவராவார்.

கண்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்தனர்.

உயிரிழந்தவரின் கை, கால்கள் கயிற்றினால் கட்டப்பட்டிருந்த நிலையில் இவர் பலத்த காயங்களுடன் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விஹாரையின் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த காவலாளி ஒருவர் பொலிஸாரால் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கண்டி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

# போதை ஒழிப்பு பிரிவு கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் போதைப்பொருளுடன் கைது!

கொழும்பு, ஏப். 09

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவின் கான்ஸ்டபிள் உட்பட மூன்று பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைதாகியுள்ளனர்.

திவுலப்பிட்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது குறித்த மூவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட மூவரும் மீரிகம பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன், கைது செய்யப்பட்ட கான்ஸ்டபிள் சில காலம் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவில் கடமையாற்றியவர் எனவும் அவர் கடந்த 15 ஆம் திகதியின் பின்னர் பணிக்கு திரும்பவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ)

# வறிய குடும்பங்களுக்கு தலா 20 கிலோ அரிசி!

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு

கொழும்பு, ஏப். 09

எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு, வறுமைக்கோட்டுக்கு கீழ் வாழும் 2.75 மில்லியன் குடும்பங்களுக்கு தலா 20 கிலோ அரிசியை பகிர்ந்தளிக்கவுள்ளதாகவும் இதற்காக 20,000 மில்லியன் ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

நலன்புரி மற்றும் ஏனைய உதவிகள் எதுவும் கிடைக்காத குடும்பங்களுக்கே இந்த உதவி வழங்கப்படவுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

அதனைத் தொடர்ந்து, நலன்புரி திட்டத்தின் கீழ், சுமார் 2.4 மில்லியன் குடும்பங்களுக்கு வருகின்ற ஜூலை மாதத்துக்குள் பல நன்மைகள் பெற்றுத்தரப்படும் எனவும் அவர் கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளினால், மீட்டெடுக்க சுமார் பதினைந்து வருடங்களாகும். எனவே, பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்-என்றார்.

(அ)

# மோட்டார் சைக்கிள் விபத்தில் இசைக் கலைஞர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 09

அநுராதபுரம், பாதெனிய, தலாவ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளார் என தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் தலாவ பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதான இசைக் கலைஞராவார்.

நேற்று திங்கட்கிழமை காலை அநுராதபுரத்திலிருந்து தலாவ பிரதேசத்திற்கு இந்த இளைஞர் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, தலாவ பிரதேசத்தில் வைத்து இந்த மோட்டார் சைக்கிள் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# பொதுமக்களின் பாவனைக்காக நேற்று முதல் இரட்டை மேம்பாலம்

## ஜனாதிபதியால் திறந்துவைப்பு

கொழும்பு, ஏப். 09

கொம்பனித்தெரு, நீதிபதி அக்பர் மாவத்தை மற்றும் உத்தரானந்த மாவத்தை ஆகிய பகுதிகளை இணைக்கும் வகையில் ரயில் பாதைக்கு மேலாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இரட்டை மேம்பாலத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று மக்களின் பாவனைக்காக திறந்து வைத்தார்.

இந்தத் திட்டத்தின் அடுத்த கட்ட நிர்மானப் பணிகளை செப்ரெம்பர் மாதத்திற்குள் நிறைவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

அரச அலுவலகங்கள், வைத்தியசாலைகள், மத வழிபாட்டுத் தலங்கள், உணவகங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களைக் கொண்ட மிகவும் பரபரப்பான வர்த்தக நகரமான கொம்பனித்தெரு பிரதேசத்தில் அமைந்துள்ள ரயில் கடவையின் காரணமாக நாளாந்தம் 03 மணித்தியாலங்கள் விரயமாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

காலதாமதத்தை தவிர்க்கும் வகையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தின் நிர்மாணப் பணிகளை மாகா பொறியியல் நிறுவனம் மேற்கொண்டு வருகின்றது.




போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பந்துல குணவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் ஆர். டபிள்யூ. ஆர்.பிரேமசிறி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சமிந்த அதுலுவகே, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரியந்த சூரியபண்டார மற்றும் பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(அ)

# திருடிய ஓட்டோவுடன் மாட்டியவர் சைக்கிளை பறித்து தப்பியோட்டம்!

யாழ்ப்பாணம், ஏப். 09

யாழ்ப்பாணத்தில் ஓட்டோ திருடி சென்றவரைப் பொலிஸார் கைது செய்ய முற்பட்ட வேளை, சந்தேக நபர் வீதியில் சென்ற மாணவனின் சைக்கிளைப் பறித்து அதன் மூலம் தப்பிச் சென்றுள்ளார்.

நபரொருவர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அருகில் தனது ஓட்டோவை நிறுத்தி விட்டு மருத்துவ மனைக்குச் சென்று திரும்பியவேளை தனது ஓட்டோ களவாடப்பட்டதை அறிந்து அது தொடர்பில் உடனடியாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தார்.

இந்நிலையில் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரியொருவர் குறித்த ஓட்டோ யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதியில் பயணித்தபோது அடையாளம் கண்டு வழிமறித்துள்ளார். உடனே அந்த நபர் ஓட்டோவை கைவிட்டு விட்டு தப்பியோடி, வீதியில் பயணித்துக்கொண்டிருந்த மாணவனின் சைக்கிளைப் பறித்துக்கொண்டு தப்பியோடியுள்ளார்.

இது குறித்த மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

(அ)

# கல்முனை வடக்கு பறிபோகுமாயின் கிழக்கு இருப்பு கேள்விக்குறியாகும்!

## தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சுகாஷ்

அம்பாறை, ஏப். 09

**கல்முனை வடக்கு பிரதேசமானது பறிபோகுமாயின் கிழக்கு இருப்பு கேள்விக்குறியாக போய்விடும். அம்பாறை தமிழ் தேச வரைபடத்தில் இருந்து நீக்கப்படும்.ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.**

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் மீதான தொடர்ச்சியாக நிர்வாக அடக்குமுறைகளுக்கு எதிராக அங்குள்ள பொதுமக்கள் 14 ஆவது நாளாக நேற்று முன் தினம் கவனயீர்ப்புப் பேரணியுடன் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலையில் அங்கு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 34 வருடங்களாக ஒரு சுயாதீனமான பிரதேச செயலகமாக இயங்கி வருகின்றது. ஆனால் இங்கு ஒரு தனியான பிரதேச செயலாளர் என்று ஒருவர் இல்லை.இது இலங்கையின் ஆச்சரியங்களில் ஒன்று.கணக்காளர் என்ற ஒருவர் இல்லை. கல்முனை தெற்கு பிரதேச செயலாளரின் ஏதேச்சையான அதிகாரத்தினுள் சட்டவிரோத உத்தரவிற்கு கட்டுப்பட்டு தான் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் செயற்பட்டு கொண்டு இருக்கின்றது.இது அரச ஏதேச்சை அதிகாரமாகும்.

இது அரச பயங்கரவாதம். 1993.07.23 ஆம் திகதி இலங்கை அமைச்சரவையில் ஒரு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.இதில் கல்முனை வடக்கு பிரதேச செயலகமானது ஒரு சுயாதீனமாக இயங்குகின்ற பிரதேச செயலகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.ஆனால் அமைச்சரவை தீர்மானத்தை மீறி இந்த அரசானது செயற்பட்டு கொண்டிருக்கின்றது.அரசாங்கம் செயல்பட்டு கொண்டு இருக்கின்றது.கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயற்பட்டு கொண்டு இருக்கின்றார்.இது சட்டத்தை மீறிய செயற்பாடாகும்.ஒரு அமைச்சரவை தீர்மானத்தை மீறி எவ்வாறு கல்முனை தெற்கு பிரதேச செயலாளர் செயபட முடியும். இதை நாம் அனுமதிப்போமாயின் தமிழ் தேச வரைபடத்தில் இருந்து கல்முனை வடக்கு அகற்றப்படும்.




தமிழர் தாயகத்தில் இருந்து கல்முனை வடக்கு பறி போக போகின்றது.இது தான் அவர்களது சூழ்ச்சி.இது தான் அவர்களது நிகழ்ச்சி நிரல்.இந்த சதிக்கு எதிராகத் தான் இந்த மக்கள் போராடிக் கொண்டு இருக்கின்றார்கள்.14 நாட்களாக இந்த மக்கள் போராடி வருகின்றார்கள்.இவர்களுக்கு இந்த நீதி கிடைக்கும் வரை மக்களோடு சேர்ந்து நாமும் போராடுவோம். இது வெறுமனே கல்மனை வடக்கின் பிரச்சினை மாத்திரம் அல்ல.தமிழ் தேசத்தின் பிரச்னை. கல்முனை வடக்கிற்கு நீதி கேட்டு தமிழ் தேசம் திரள வேண்டும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, முல்லைத்தீவு, திருகோணமலை, மக்கள் திரண்டு போராட வேண்டும்.கல்முனை வடக்கு பிரதேசமானது பறிபோகுமாயின் கிழக்கு இருப்பு கேள்விக்குறியாக போய்விடும். அம்பாறை தமிழ் தேச வரைபடத்தில் இருந்து நீக்கப்படும்.

ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும். நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தாக்கல் செய்திருக்கின்றார்கள். அந்த வழக்கினை மீறி கல்முனை வடக்கு பிரதேச செயகத்தை உப பிரதேச செயலகம் என கூறி கடிதங்கள் அனுப்பப்படுகின்றன. வழக்கினை தாக்கல் செய்தவர்கள் (தமிழ் தேசிய கூட்டமைப்பினர்) பார்த்துக் கொண்டு இருக்கின்றார்கள்.ஏன் திருகோணமலையில் நீதிமன்ற அவமதிப்பு என்று வழக்கு தாக்கல் செய்த உங்களுக்கு இங்கு இவ்வாறு வழக்கு தாக்கல் ஒன்றினை நீதிமன்ற அவமதிப்பு என்று மேற்கொள்ள முடியாதா?முடியும். ஆனால் எங்களது தலைவர்கள் கல்முனை வடக்கை சிங்கள பௌத்த பேரினவாதத்துடனும் சில அரசியல் தலைவர்களிடமும் விற்றுவிட்டார்கள்.

இதை நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.கல்முனை வடக்கிற்கு நீதி கிடைக்கின்ற வரை நாங்கள் போராடுவோம். எங்களது கோரிக்கையான கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் உரிமைகள் அனைத்தும் வழங்கப்பட வேண்டும்.கல்முனை தெற்கு பிரதேச செயலாளரது அதிகாரங்கள் எமது பிரதேச செயலக எல்லையினுள் நிறுத்தப்பட வேண்டும்.நிறுத்தப்படுகின்ற வரை எமது போராட்டம் தொடரும்.கல்முனை வடக்கானது தமிழ் தேசத்தின் ஒரு பகுதி என்பதை மீண்டும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

இங்கு இடம்பெறுகின்ற அநீதிகளுக்கு எதிராக தமிழ் தேசமாக நாங்கள் போராடுவோம்.நீதி கிடைக்கின்ற வரை எமது குரல்கள் ஓயப்போவது கிடையாது-என்றார். (அ)

# மூவின சமூகங்களை உள்ளடக்கி இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு



அம்பாறை, ஏப். 09

அம்பாறை மாவட்ட சமாதான நீதவான் சங்கம் மற்றும் அக்கரைப்பற்று கல்முனை மாவட்ட சாரணர் சங்கம் இணைந்து நடத்திய இன நல்லிணக்க இப்தார் நிகழ்வு அக்கரைப்பற்று ஏசியன் செப் ஹோட்டலில் நடைபெற்றது.

உதவி மாவட்ட சாரண ஆணையாளரும், சிரேஷ்ட ஊடகவியலாளருமான எம்.எப். றிபாஸின் நெறிப்படுத்தலின் கீழ் சமாதான நீதவான் சங்கத்தின் தலைவர் யூ. எல். எம். ஹாசிம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு நாபீர் பவுண்டேஷனின் ஸ்தாபகர் உதுமாங்கண்டு நாபீர் பிரதம அதிதியாகவும், இலங்கை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பொறியியலாளர் ஏ. எல். எம். பாறூக் கௌரவ அதிதியாகவும், ஓய்வு பெற்ற உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஏ. ஏ. வாஹீத், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே. அமீர் மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெவ்வை பிரதம பொலிஸ் பரிசோதகர் எஸ். எம். சதாத், மூதுரை சேர்ந்த தொழிலதிபர் மௌசூம் ஹாஜியார் ஆகியோர் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.(அ)

# குடுவில் அரபா நகர் வீடுகளுக்கு சூரிய சக்தி மின் இணைப்புகள்



அம்பாறை, ஏப். 09

இறக்காமம், குடுவில் அரபா நகர் கிராமத்தில் மின்சார வசதி இல்லாமல் மிக நீண்ட காலமாக பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வந்த சுமார் 35 குடும்பங்களுக்கு தனவந்தர்களால் சூரிய சக்தி மின் இணைப்பு வழங்கப்பட்டது.

35 குடும்பங்களுக்கு மின் இணைப்பினை உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. சமூக செயற்பாட்டாளர் எஸ்.எம்.சன்சீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸதீன் மற்றும் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.றஷ்ஷான் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டு மின் இணைப்பினை வழங்கினர்.

இதன்போது பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம். சீ.எம்.மாஹிர், இறக்காமம் பொலீஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எம்.ஐ.ஜஃபர், கிராம உத்தியோகத்தர்களான ஏ.சீ. எம்.சமீர், எம்.ஜே.எம்.அதீக், சமூக சேவையாளர் ஜிப்ரி ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து சிறப்பித்தனர்.

(அ)

# சமூக அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு

## முஷாரப் எம்.பி உட்பட பலரும் பங்கேற்பு

அம்பாறை, ஏப். 09

மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை ஏற்பாடு செய்த வருடாந்த இஃப்தார் நிகழ்வு மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய அதிபர் ஏ.எல்.எம்.ஏ. நளீர் திறந்தவெளி அரங்கில் சமூக அபிவிருத்தி சபை தலைவரும், காரைதீவு பிரதேச சபை முன்னாள் உப தவிசாளருமான ஏ.எம். ஜாஹீரின் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்பு குழு தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம். எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். மேலும் உலமாக்கள், கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். றம்ஸின் பக்கீர், காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி செல்டன் ஜெகத், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினர் யூ.எல்.என். ஹுதா, பிராந்திய பாடசாலைகளின் அதிபர்களான ஏ.சி.எம். நளீம், எம்.ஐ.சம்சுதீன், எம்.எஸ். எம். பைசால், இ.மி.சபை உத்தியோகத்தர் யூ.கே.எம். ரஸாக், கல்முனை தலைமையக தபால் அதிபர் யூ.எல். பைசர், மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம், பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பு செயலாளர் அஸாம் எ அஸீஸ், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், பிரதேச முக்கியஸ்தர்கள், மாளிகைக்காடு சமூக அபிவிருத்தி சபை நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



(அ)

# பணயக் கைதிகளை விடுவிக்கும்வரை காஸாவில் போர் நிறுத்தம் கிடையாது!

## இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்

ஜெருசலேம், ஏப். 09

**“இஸ்ரேல்-ஹமாஸ் இடையேயான போர் தொடங்கி 6 மாதங்களைக் கடந்துள்ள நிலையில், பணயக் கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவிக்கும்வரை போர் நிறுத்தம் கிடையாது” என இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.**




இஸ்ரேலில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தினையடுத்து நாட்டு மக்களுக்கு உரையாற்றிய போதே பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

நாம் வெற்றிபெற இன்னும் ஒருபடியே எஞ்சியுள்ளது. ஆனால், வெற்றிக்காக நாம் கொடுத்த விலை வலி நிறைந்ததாக உள்ளது.

பணய கைதிகளை ஹமாஸ் படையினர் விடுவிக்கும்வரை போர் நிறுத்தம் கிடையாது. பணய கைதிகள் ஒப்பந்தத்திற்கு இஸ்ரேல் தயாராக உள்ளது. ஆனால், சரணடைய இஸ்ரேல் தயாராக இல்லை.

எனவே சர்வதேச நாடுகள் இஸ்ரேலுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு பதிலாக ஹமாஸ் படையினருக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அது பணய கைதிகள் விடுதலைக்கான முயற்சிகளை அதிகரிக்கும். எங்களை யார் தாக்கினாலும், தாக்க நினைத்தாலும் நாங்கள் அவர்களை தாக்குவோம்-என்றார்.




# அடுக்குமாடி குடியிருப்பில் தீ விபத்து!

பாரிஸ், ஏப். 09

பிரான்ஸின் தலைநகரான பாரிஸில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பொன்றில் நேற்று இடம்பெற்ற தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த அடுக்குமாடி குடியிருப்பின் 7வது தளத்திலேயே இத் தீ விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், இதில் 3 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையத்து சம்பவ இடத்துக்கு விரைந்த தீயணைப்புப் படையினர் தீயை முற்றுமுழுதாக அணைத்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமையல் எரிவாயுக் கசிவு காரணமாக குறித்த தீ விபத்து இடம்பெற்றிருக்கலாம் என முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (அ)

# மொசாம்பிக்கின் வடக்கு கடற்கரையில் படகு கவிழ்ந்து 90 இற்கு மேற்பட்டோர் பலி!



மபுட்டோ, ஏப். 09

மொசாம்பிக்கின் வடக்கு கடற்கரையில் அதிக பயணிகளை ஏற்றிச்சென்ற படகு மூழ்கியதில் 90 இற்கும் மேற்பட்டோர் இறந்ததாக உள்ளூர் அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர்.

மீன்பிடி படகு, சுமார் 130 பேரை ஏற்றிக்கொண்டு, நம்புலா மாகாணத்திலிருந்து ஒரு தீவை அடைய முயன்றபோது சிக்கலில் சிக்கியதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

“படகில் கூட்டம் அதிகமாக இருந்ததாலும், பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு ஏற்றதாக இல்லாததாலும் அது மூழ்கியது. 91 பேர் உயிரிழந்துள்ளனர்,” என்று நம்புலாவின் மாநில செயலாளர் ஜெய்ம் நெட்டோ கூறினார்.

பலியானவர்களில் பல குழந்தைகளும் உள்ளடங்குவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மீட்புப் பணியாளர்கள் ஐந்து உயிர் பிழைத்தவர்களைக் கண்டுபிடித்தனர். மேலும் பலரைத் தேடினர். ஆனால் கடல் நிலைமைகள் செயல்பாட்டை கடினமாக்குகின்றன.

கொலரா பற்றிய தவறான தகவல்களால் ஏற்பட்ட பீதியின் காரணமாக பெரும்பாலான பயணிகள் நிலப்பகுதியிலிருந்து தப்பிக்க முயன்றதாக நெட்டோ கூறினார்.

உலகின் ஏழ்மையான நாடுகளில் ஒன்றான மொசாம்பிக்கில் கொலரா அச்சுறுத்தி வருகிறது. கடந்த ஒக்டோபரில் இருந்து கிட்டத்தட்ட 15,000 பேர் நீரினால் பரவும் கொலராவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். 32 இறப்புகளைப் பதிவு செய்துள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.


நம்புலா மிகவும் பாதிக்கப்பட்ட பகுதி. நட்டில் பாதிக்கப்பட்ட மொத்த கொலரா நோயாளிகளில் மூன்றில் ஒரு பங்கு இந்த பிரதேசத்திலேயே பதிவாகியுள்ளது.

சமீபத்திய மாதங்களில், மாகாணம் அதன் வடக்கு அண்டை நாடான கபோ டெல்கடோவில் தீவிரவாதத் தாக்குதல்களும் மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

படகு விபத்துக்கான காரணங்களைக் கண்டறிய விசாரணைக் குழு செயல்பட்டு வருவதாக நெட்டோ கூறினார்.

உயிர் பிழைத்த ஐவரில் இருவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார். (அ)

# காஸாவின் மிகப்பெரிய வைத்தியசாலையை முற்றிலுமாக அழித்த இஸ்ரேலிய படையினர்!




ஜெருசலேம், ஏப். 09

அல்-ஷிஃபா மருத்துவமனை முற்றிலும் அழிக்கப்பட்டுவிட்டதாக உலக சுகாதார நிறுவனம் தகவல் வெளியிட்டுள்ளது.

மருத்துவமனை அல்-ஷிஃபா மருத்துவமனை காஸா பகுதியில் செயல்பட்டு வந்த மிகப் பெரிய மருத்துவமனை ஆகும்.

குறித்த மருத்துவமனை தற்போது முழுமையாக அழிக்கப்பட்டுவிட்டதாகவும், அங்கு முற்றிலும் சிதைக்கப்பட்ட 5 சடலங்கள் இருந்ததாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமாஸுக்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் இராணுவம், அல்-ஷிஃபா மருத்துவமனையில், தீவிரவாதிகள் தங்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அங்கு தீவிர தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

அதன்பிறகு அந்த இடத்தைப் பார்வையிட்ட உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வுக் குழு, மருத்துவமனை முற்றிலும் சேதமடைந்திருப்பதாக தெரிவித்துள்ளது. (அ)

# இஸ்ரேல் வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதி பலி!



பெய்ரூட், ஏப். 09

தெற்கு லெபனானில் உள்ள அல் சுல்தான்யா கிராமத்தின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் லெபனானின் ஹெஸ்புல்லா உயரடுக்கு படை அல் ரத்வானின் களத் தளபதி உட்பட மூன்று பேர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஞாயிறன்று இஸ்ரேலிய இராணுவம் லெபனானுடனான அதன் வடக்கு எல்லையில் போருக்கான தயாரிப்பின் “மற்றொரு கட்டத்தை” அடைந்துவிட்டதாகக் கூறியது, அங்கு ஈரான் ஆதரவு ஹெஸ்பொல்லாவுடன் பல மாதங்கள் துப்பாக்கிச் சூடுகளை பரிமாறிக்கொண்டது.

ஹெஸ்புல்லா பொதுவாக எல்லைக்கு அருகில் உள்ள இஸ்ரேலிய நிலைகளை குறிவைக்கிறது. மேலும் ஒக்ரோபர் 7 அன்று ஹமாஸ் இஸ்ரேலை தாக்கியதில் இருந்து காசா பகுதியில் இஸ்ரேலுடன் போரில் ஈடுபட்டு வரும் ஹமாஸ் போராளிகளுக்கு ஆதரவாக அவ்வாறு செய்வதாக கூறுகிறது.

இஸ்ரேல் அண்மையில் லெபனான் எல்லைக்குள் ஆழமான தாக்குதல்களை நடத்தியதுடன், லெபனானின் ஹெஸ்புல்லா குழுவின் தளபதிகளையும் குறிவைத்துள்ளது.

ஹெஸ்புல்லா மற்றும் சிரியாவில் ஈரானுடன் தொடர்புடைய பிற இலக்குகளுக்கு எதிரான தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது. டமாஸ்கஸில் உள்ள ஈரானின் தூதரகப் பிரிவுக்கு எதிராக ஏப்ரல் 1 அன்று வான்வழித் தாக்குதல் நடத்தியதும் குறிப்பிடத்தக்கது.

ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேலிய இராணுவம் லெபனான் போர்முனையில் “வடக்குக் கட்டளையின் போருக்கான தயார்நிலையின் மற்றொரு கட்டம்” முடிந்துவிட்டது என்று கூறியது.

# மொட்டுக் கட்சியின் தலைவருக்கு அடிபணியும் ஐக்கிய மக்கள் சக்தி!

## ஜனாதிபதி ரணில் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 09

**ஐக்கிய தேசியக் கட்சியின் உரிமையைப் பிரகடனப்படுத்தி 2020ஆம் ஆண்டு சிறிகொத்தவைக் கைப்பற்றத் தயாரான ஐக்கிய மக்கள் சக்தி, இன்று மொட்டுக் கட்சித் தலைவர் உள்ளிட்டோருக்கு அடிபணிந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கடந்த காலத்தில் அரசியல் கட்சிகளில் பிளவுகள் ஏற்பட்டன. மொட்டுக் கட்சியில் இருந்து சிலர் எதிர்க்கட்சிக்கு சென்றனர். இப்போது அந்தக் குழு ஐக்கிய மக்கள் சக்தியை வழிநடத்துகிறது. ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தாங்கள் சிறிகொத்தாவைக் கைப்பற்ற வேண்டும் என்று 2020 ஆம் ஆண்டில் ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது.

ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி என்று அழைக்கப்படும் குழு தற்போது மொட்டுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட குழுவின் கட்டுப்பாட்டில் உள்ளது. இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் ஐக்கிய தேசியக் கட்சி இல்லை. ஐக்கிய தேசியக் கட்சியை பாதுகாத்தவன் நான்.

ஜே.ஆர் ஜயவர்தன, ஆர், பிரேமதாச, டி.பி. விஜேதுங்க, இவர்கள் அனைவருடனும் நாங்கள் பணியாற்றினோம்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சி என்று தங்களை அழைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த உரிமையும் இல்லை. இன்று எமக்கு பொதுஜன பெரமுன மற்றும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. நாட்டு நலனுக்காக நாம் இணைந்து செயற்பட வேண்டும்-என்றார்.

(அ)

# நீரில் மூழ்கி இறப்பவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

கொழும்பு, ஏப். 09

நீரில் மூழ்கி நாளாந்தம் இறப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு வருடமும் நீரில் மூழ்கி சுமார் 800 பேர் உயிரிழப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் தலைவர் சமூக வைத்திய நிபுணர் சமித்த சிரிதுங்க தெரிவித்தார்.

அதன்படி இலங்கையில் இரண்டு அல்லது மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். எங்களின் தகவல்களின்படி இந்த நிலை அதிகரித்து வருகிறது எனவும் அவர் தெரிவித்தார்.

மேலும் அறிமுகமில்லாத இடங்களில் குளிக்கும்போது அதிக கவனத்துடன் இருக்க வேண்டும் என நிபுணர் கலாநிதி சமித்த சிரிதுங்க குறிப்பிட்டார்.

(அ)

# பாலத்தில் பஸ் விபத்து!

கொழும்பு, ஏப். 09

ஹங்குரன்கெத்த பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தெல்தோட்டை - லூல்கந்துர பகுதியில் நேற்று முன் தினம் பிற்பகல் மாலை பேருந்து ஒன்று பாலத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

ஆடைத்தொழிற்சாலை ஒன்றின் பணியாளர்களை ஏற்றிச் சென்ற தனியார் பஸ் ஹங்குரன்கெத்தவிலிருந்து தெல்தோட்டை நோக்கிச் சென்றுகொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் பஸ்ஸின் சாரதி மற்றும் இரண்டு பெண் பணியாளர்களும் காயமடைந்து தெல்தோட்டை பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

(அ)

# கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, ஏப். 09

சர்ச்சையை ஏற்படுத்திய இம்யூனோகுளோபிலின் சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் நீடிக்கப்பட்டுள்ளது.

அதன்படி சந்தேகநபர்கள் நேற்று மாளிகாகந்தை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டபோதே இவ்வாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

இதேவேளை முதலாம், இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஆறாவது, ஏழாவது மற்றும் எட்டாவது சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டு ஐந்தாவது சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது

அத்துடன், 10ஆம் மற்றும் 11ஆம் சந்தேக நபர்களை எதிர்வரும் 10ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி பிணை வழங்குவதா இல்லையா என்பதை தீர்மானிக்குமாறு நீதவான் உத்தரவிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# மகிந்த, லசந்த, துமிந்த ஆகியோரை நீக்குவதை தடுக்கும் உத்தரவு நீடிப்பு

கொழும்பு, ஏப். 09

அமைச்சர்களான மஹிந்த அமரவீர, லசந்த அழகியவன்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க ஆகியோரை சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அமுல்படுத்துவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நீடிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியில் இருந்து நீக்கப்பட்டமைக்கு எதிராக அந்த அமைச்சர்களால் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை நேற்று எடுத்துக்கொண்ட போதே கொழும்பு மாவட்ட நீதிபதி சந்துன் விதான இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இந்த மனுக்களில் பிரதிவாதிகளாக சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, பதில் பொதுச் செயலாளர் சரதி துஷ்மந்த மித்ரபால உள்ளிட்டோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மேலும் நியாயமான ஒழுக்காற்று விசாரணையின்றி தம்மை கட்சியில் இருந்து நீக்கி கட்சி செயற்குழு எடுத்த தீர்மானம் சட்டத்திற்கு முரணானது எனவும் அதனை செல்லாது என அறிவிக்கவேண்டும் எனவும் கோரி சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மாவட்ட நீதிமன்றத்தில் முறைப்பாடு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# 6000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள்!

கொழும்பு, ஏப். 09

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பொருளாதார சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் 6000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்கும் திட்டத்தை எதிர்வரும் மே மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த பொருளாதார சிரமங்களுக்கு முகங்கொடுக்கும் 6000 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் வழங்குவது தொடர்பான நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. மார்ச் மற்றும் ஏப்ரல் வரையிலான நிலுவைத் தொகையை 2024 மே முதல் வழங்குவதற்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

அதன்படி மார்ச் முதல் அமுலுக்கு வரும் வகையில் மாதாந்தம் 6000 ரூபாய் வீதம் 24 தவணைகளுக்கு இந்த புலமைப்பரிசில் தொகை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பட்டியல்கள் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான **www.presidentsfund.gov.lk** இல், அடுத்த சில நாட்களில் வெளியிடப்படும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ பேஸ்புக் பக்கமான **www.facebookcom/president. fund I like** அல்லது **follow** செய்யுமாறும் ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது.

மேலும், தரம் 1 முதல் தரம் 11 வரை பொருளாதார சிரமங்களுக்கு உள்ளான ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்படும் ஜனாதிபதி புலமைப்பரிசில் திட்டத்துக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வது தற்போது முடிவடைந்துள்ளதுடன், புலமைப்பரிசில் பெறத் தகுதி பெற்றோரின் பட்டியல் எதிர்வரும் நாட்களில் வலய மட்டத்தில் ஜனாதிபதி நிதியத்திற்கு கிடைக்கவுள்ளது.

இந்தப் பட்டியல்களைப் பெற்ற பின்னர், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபாய் வீதம் 12 மாதாங்கள் புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் புலமைப்பரிசில் தொகை எதிர்வரும் மே மாதம் முதல் வழங்க திட்டமிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# பாதுக்கையில் சூடு: ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப். 09

பாதுக்கை, அங்கமுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் விமானப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பொலிஸ் வீதித் தடைக்கு அருகில், பொலிஸாரின் உத்தரவை மீறி மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த நபர் பொலிஸாரை நோக்கி துப்பாக்கிச்சூடு நடத்தியதாகவும், இதனையடுத்து பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் அவர் படுகாயமடைந்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை உயிரிழந்தவர் ஹொரணை - தல்கஹவில பிரதேசத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

# நெருங்கிய உறவினரிடம் தத்து கொடுத்த சிறுமி மர்ம மரணம்!

கொழும்பு, ஏப். 09

உடன்படிக்கையின் மூலம் நெருங்கிய உறவினருக்கு வழங்கப்பட்ட 4 வயது 7 மாத பெண் குழந்தை சந்தேகத்திற்கிடமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பெண்ணின் கணவர் உட்பட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக மாளிகாவத்தை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஒப்பந்தத்தின் மூலம் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தையை வேறு தரப்பினருக்கு வழங்க ஏற்பாடு செய்தமை தொடர்பில் சந்தேக நபர் (இறந்த சிறுமியின் தந்தை) கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட ஏனையவர்களில் சிறுமியை தத்தெடுக்க ஏற்றுக்கொண்ட 45 வயதுடைய பெண்ணும், அவரது 19 வயது மகள் மற்றும் 15 வயது மகனும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மாளிகாவத்தை லக் செவன அடுக்குமாடி குடியிருப்பில் தற்காலிகமாக வசித்த மொஹமட் ரிப்கான் ஹைசா துரதிஷ்டவசமாக உயிரிழந்துள்ளார்.

(அ)

## மேல் நீதிமன்ற...

- செல்வபுரத்தில் 1976ஆம் ஆண்டு பிறந்த ஆசிர்வாதம் கிறேசியன் அலெக்ஸ் ராஜா முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றிருந்தார். 2007ஆம் ஆண்டு நீதிச் சேவை அலுவலகராக நியமனம் பெற்று நீதிபதியாக யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அனைத்து நீதிவான் நீதிமன்றங்களிலும் பணியாற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தலைப்பிறை...

கொழும்பு பெரிய பள்ளிவாசலில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் கொழும்பு பெரிய பள்ளிவாசல், அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள உறுப்பினர்கள் மற்றும் உலமாக்கள் கலந்துகொள்வர்.

நாட்டின் எந்தப் பிரதேசத்திலாவது ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டால் தகுந்த ஆதாரங்களுடன் 011 243 2110, 011 245 1245, 077 731 6415 என்ற இலக்கத்துடன் தொடர்புகொண்டு அறிவிக்குமாறு கொழும்பு பெரிய பள்ளிவாசல் முஸ்லிம் மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ)

## மீண்டும்...

- என்று ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

காலியில் நடந்த நிகழ்வு ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், ரணில் விக்கிரமசிங்க என்ற தேசிய தலைவர் இந்த நாட்டை பொறுப்பேற்றதாலேயே வீழ்ச்சியடைந்திருந்த நாட்டின் பொருளாதாரத்தை மிகவும் குறுகிய காலத்தில் மாற்றியமைக்க முடிந்தது. அவர் இந்த நாட்டை பொறுப்பெற்கும்போது இருந்த நிலைமையை முற்றாக மாற்றியமைத்தார். பொருளாதாரத்தை கட்டியெழுப்ப சர்வதேசத்துடன் கதைத்தார். பொருளாதார மறுசீரமைப்பை நாட்டுக்குள் செயல்படுத்தினார்.

இதனால், நாடு வேறு வழியில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இன்று சில அரசியல் தலைவர்கள் பல்வேறு விடயங்களை தெரிவித்தாலும் ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் பாதையை தவிர வேறு பாதை இல்லை.

ரணில் விக்கிரமசிங்க பயணிக்கும் பாதை சர்வதேசமும் வரவேற்றிருக்கிறது. எதிர்க்கட்சி அரசியல்வாதி ஒருவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தற்போது செல்லும் இந்த பாதையை மாற்றியமைப்பதாக குறிப்பிட்டிருந்தார். அவ்வாறு செய்ய முடியாது. ஏனெனில், நாங்கள் பயணிக்கும் இந்த பாதையை சீனா, ஜப்பான், இங்கிலாந்து, பிரான்ஸ், உலகவங்கி ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஜைகா நிறுவனம், இந்தியா போன்ற அனைத்து நாடுகளும் நாங்கள் பயணிக்கும் பாதைக்கு ஆதரவளித்திருக்கின்றன.

இந்த நாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடனை செலுத்தும் முறையை ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார் 2027இல் இருந்தே கடன் செலுத்துவதாக கடன் பெற்ற நாடுகளிடம் தெரிவித்திருக்கிறார். என்றாலும் நிலைமையை சரி செய்துகொள்ள வேண்டும் என்பதற்காக தற்போதும் பகுதி அடிப்படையில் கடன் செலுத்தி வருகிறோம். 2027இற்கு பின்னரே மொத்த கடனும் செலுத்த வேண்டும்.

கடன் செலுத்தும் முறையையும் தெரிவித்திருக்கிறோம். அதனை யாராவது மீறினால், நான் உட்பட அனைவரும் மீண்டும் வீதியில் பிச்சை எடுக்க வேண்டி வரும் என்பதை நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் எமது நாட்டை உலகுக்கு முன்னால் உயர்ந்த நிலையில் வைப்பதற்கு ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதே எம் அனைவருக்கும் தற்போதுள்ள பொறுப்பாகும் - என்றார். (ஐ)

## தென்னிலங்கையில்...

சம்பவத்தில் கார் திருத்தும் நிலையத்தில் பணியில் இருந்த 34 வயது நபரே உயிரிழந்தார்.

இதேசமயம், கொழும்பு - பாதுக்கையில் விசேட அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் விமானப் படை உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

இதேவேளை, கடந்த இரு தினங்களில் மட்டும் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் தென்னிலங்கையில் 5 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

(தொடர்புடைய செய்தி பக்கம் 10இல்)

## அனைத்து...

புற்றுநோயாளர்கள், புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கு என்று தினசரி 50 பைந்த் இரத்தம் தேவைப்படுகின்றது. ஆனால், 30 பைந்துக்கும் குறைவான குருதியே சராசரியாகக் கிடைக்கின்றது.

இதனால், யாழ். போதனா மருத்துவமனையில் குருதி வகைக்கு - குறிப்பாக பொது வழங்கியான "ஓ" வகைக் குருதிக்கு பெருந்தட்டுப்பாடு நிலவுகிறது. எனவே, பொது மக்கள் உதிரம் கொடுத்து உயிர் காக்கும் உன்னத பணியில் இணைய முன்வருமாறு இரத்த வங்கி பிரிவு கோரியுள்ளது.

குருதிக் கொடை வழங்க விரும்புபவர்கள் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கிக்கு வருகை தருமாறும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஆய்வு அறிக்கை...

உத்தேச திட்டத்தின் சாத்தியக்கூறுகள் மற்றும் பலன்கள் ஆராயப்பட்டன. அத்துடன், இந்திய வெளிவிவகார செயலாளர் வினய் குவத்ரா உட்பட உயர் மட்ட அதிகாரிகளும் சாகல ரத்நாயக்க பேச்சு நடத்தியிருந்தார்.

மேலும், பாலத்தின் ஊடாக ஏற்படக்கூடிய நன்மைகள் குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையேயான இறக்குமதி-ஏற்றுமதி நடவடிக்கைகளில் ஏற்படும் வளர்ச்சி மற்றும் ஏனைய சாத்தியக்கூறுகள் குறித்தும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

தரைப்பாலம் பொருளாதார உறவுகளை வலுப்படுத்தும் என்பதுடன், கடல்சார் கப்பல் அல்லது விமான போக்குவரத்துடன் ஒப்பிடும்போது குறைந்த அளவான போக்குவரத்து செலவுகளுடன் வர்த்தக நடவடிக்கைகளை எளிதாக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது - என்று கூறப்பட்டது. (ஐ)

## சகல நலன்புரி...

ஆண்டுக்குள் மீளக்குடியேற்றப்படவுள்ளன. ஒரு குடும்பம் மட்டுமே தமது பூர்வீக காணியை கோருகிறது. அந்தக் குடும்பத்தினருடன் பேசி இணக்கப்பாடு எட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் நீடித்த யுத்தத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்கள் நாட்டின் பல இடங்களிலும் வசிக்கின்றனர். அவர்களை அவர்களின் பூர்வீக கிராமங்களில் மீள்குடியேற்றுவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மீள்குடியேற்றப் பிரிவால் முன்னெடுக்கப்படுகின்றது.

தற்போது ஆயிரத்து 502 குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் இல்லாமல் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளன. 212 குடும்பங்களுக்கு காணி விடுவிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு விரைவில் வீடுகள் வழங்கப்படும். காணி இல்லாத ஏனைய அனைவருக்கும் காணிகளை விரைவில் வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு பணித்துள்ளார்.

இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. விரைவில் அவர்களுக்கு காணிகள் விடுவிக்கப்படும் என்று வவுனியாவில் நாளோ குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றியபோது அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# இளைஞர்கள் சுதந்திரமாக அரசியல் செய்யும் சூழல் தேவை

**சம்பிக்க ரணவக்க எம். பி.**



கொழும்பு, ஏப். 09

இளைஞர்கள் சுதந்திரமாக அரசியல் செய்வதற்கான சூழலை உருவாக்குவது அவசர தேவை என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அதற்கு தேவையான சூழலை உருவாக்குவது பெரியவர்களின் பொறுப்பாகும் என்று தெரிவித்த ரணவக்க, ஐக்கிய குடியரசு முன்னணியின் கீழ் இளைஞர்களின் சுதந்திரம் மற்றும் படைப்பாற்றலுக்கு இடம் அளிக்கப்படும் என்றார்.

தற்போதைய பாராளுமன்றத்தில் 40 வயதுக்குட்பட்ட 26 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால், 60 வயதுக்கும் 90 வயதுக்கும் இடைப்பட்ட 57 உறுப்பினர்கள் உள்ளனர் என்றார்.

ஐக்கிய குடியரசு முன்னணியின் இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## திருத்திய...

சட்டமூலம் ஏப்ரல் இறுதி வாரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இந்த வாரத்துக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் - என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ஐ. எம். எவ்வின்...

ஜூன் மாதத்திற்குள் மூன்றாவது தவணையை எதிர்பார்க்கிறோம். கடன் மறுசீரமைப்புக்கு பின்னர் சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு இடையே ஊழியர்கள் நிலை ஒப்பந்தம் உள்ளது.

இதைத் தொடர்ந்து, அந்த ஒப்பந்தத்தை முன்வைப்பதற்கான திகதியை சர்வதேச நாணய நிதியம் தீர்மானிக்கும். இதற்குப் பிறகுதான் மூன்றாவது தவணையாக 33. 7 கோடி டொலர்களை பெறமுடியும்.

ஆனால், அதற்கு முன் நாம் முடிக்க வேண்டிய பணி ஒன்று உள்ளது. அதாவது கடனை மறுசீரமைப்பதற்கான ஒருமித்த கருத்தை எமது கடனாளிகளிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

அனைத்து இரு தரப்பு கடன் வழங்குநர்களின் பூர்வாங்க ஒப்புதலைப் பெற்றுள்ளோம். வணிகக் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்கள் எட்டப்படுவதற்கான வலுவான எதிர்பார்ப்புகள் உள்ளன - என்றார்.

இதேவேளை, ஐ. எம். எவ். அதிகாரி ஒருவர், வணிகக் கடன் வழங்குநர்களுடன் ஒப்பந்தங்கள் எட்டப்படுவதற்கான வலுவான எதிர்பார்ப்புகள் உள்ளன. உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு பெரும்பாலும் நிறைவடைந்துள்ளது - என்று கடந்த வெள்ளிக்கிழமை வாஷிங்டனில் வைத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கைக்கு...

சியோலில் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இந்த உறுதியை வழங்கினார்.

மேலும், இலங்கைக்கும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்துக்கும் இடையிலான நெருக்கமான ஒத்துழைப்பைப் பாராட்டிய பான் கி-மூன், அதனை மேலும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதாகவும் பல்வேறு துறைகளிலும் இரு தரப்பினருக்கும் உள்ள வாய்ப்புகளை அடையாளம் காண்பதாகவும் பிரதமரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன, "புதுப்பிக்கத்தக்க சக்தி வலு, நிலைபேறான போக்குவரத்து வசதி மற்றும் பசுமை நகர உருவாக்கம் ஆகியவற்றின் ஊடாக பசுமையான, அனைவரையும் உள்ளடக்கிய, மீண்டெழும் தன்மையுடைய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துவருகின்றது" எனத் தெரிவித்தார்.

இலங்கை கடந்த 2019 ஆம் ஆண்டு உலகளாவிய பசுமை வளர்ச்சி நிலையத்தில் ஓர் உறுப்பு நாடாக இணைந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரூ 6,500 கோடி பெறுமதியான திறைசேரி உண்டியல் ஏலம்!

கொழும்பு, ஏப். 09

6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், இன்றைய தினம் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 2 ஆயிரம் கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## பொருளாதார...

எதிர்பார்க்கிறேன்.

சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத் திட்டத்தை தொடர வேண்டுமா அல்லது அதை மாற்றியமைப்பதா என்பதை நாங்கள் தீர்மானிக்க வேண்டும். சம்மதித்து விட்டு ஒவ்வொரு முறையும் முடிவை மாற்றிக் கொள்ளும் அவப்பெயர் இலங்கைக்கு உண்டு. இதுவே நாட்டுக்காக எமக்கு கிடைத்துள்ள கடைசி வாய்ப்பாகும்.

எனவே, இந்த நன்மையை மக்களுக்கு வழங்கும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை சட்டபூர்வமாக்க எதிர்பார்க்கிறோம். நாட்டின் மீதான பொறுப்பில் இருந்து நாம் யாரும் தப்ப முடியாது. எனவே, அதனால் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டும்.

மேலும், நாட்டின் தற்போதைய பொருளாதார முறைமையில் சிக்கித் தவிப்பதா அல்லது போட்டிமிக்க ஏற்றுமதி பொருளாதாரத்தில் கவனம் செலுத்தி நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதா என்பதை முடிவு செய்து நாட்டில் மீண்டும் பொருளாதார நெருக்கடி ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் - என்றும் கூறினார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# சு.க. மற்றொரு குழு கூடி பதில் தலைவர் தெரிவு!

## நிமல் சிறிபால டி சில்வா தெரிவானார்



கொழும்பு, ஏப். 09

**சுதந்திரக் கட்சியிலிருந்தபடி அரசாங்கத்தில் இணைந்து அமைச்சர் பதவிகளை பெற்றவர்கள் உள்ளிட்ட தரப்பினர் பலர் கொழும்பில் ஒன்றுகூடி, கட்சியின் பதில் தவிசாளராக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை தெரிவு செய்துள்ளனர்.**

இந்த நிகழ்வில் சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் கலந்து கொண்டார்.

சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையை கருத்தில் கொண்டு, கட்சியின் சிரேஷ்ட உப தலைவர் நிமல் சிறிபால டி சில்வா நேற்றுக் காலை 10 மணிக்கு அரசியல் குழுவின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எவ்வாறாயினும், கட்சியின் சிரேஷ்ட உபதலைவருக்கு இவ்வாறு அரசியல் பீட கூட்டத்தை அழைப்பதற்கு சட்ட ரீதியாக எந்த தகுதியும் இல்லை என கட்சியின் பொதுச் செயலாளர் நிமல் சிறிபால டி சில்வாவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

(அ)

# சு.கவை கட்டியெழுப்ப உதவி புரியவுள்ளேன்!

## அறிவித்தார் சந்திரிகா



கொழும்பு, ஏப். 09

சுதந்திரக் கட்சி மீளக் கட்டியெழுப்பப்பட்டு வருவதாகவும் அதற்கு உதவ தாம் எதிர்பார்ப்பதாகவும் முன் னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் அரசியல் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்காக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளரை அழைத்து வந்தேன். அவரில் எனக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. ஆனால் அவர் நாட்டையும் கட்சியையும் சாப்பிட்டு விட்டார். இருப்பினும் அந்தத் தவறு இன்று சரி செய்யப்பட்டது -என்றார். (அ)

# மன்னாரில் நடந்த விபத்தில் ஹற்றன் இளைஞர் மரணம்!

மன்னார், ஏப். 09

மன்னார் - தாழ்வுபாடு பிரதான வீதி ரெலிக்கொம் சந்திக்கு அருகாமையில் இடம்பெற்ற விபத்தில் 22 வயதுடைய இளைஞன் பரிதாபமாக மரணமானார்.

நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற குறித்த விபத்தில் மன்னாரில் உள்ள உணவகம் ஒன்றில் பணியாற்றி வந்த இளைஞனே இவ்வாறு உயிரிழந்தார்.

ஹற்றன் பகுதியை சேர்ந்த 22 வயதுடைய சந்திரகுமார் எனும் இளைஞனே விபத்தில் உயிரிழந்தவராவார்.

இவர் கடந்த 6 வருடங்களுக்கு மேலாக மன்னார் மாவட்டத்தில் உணவகங்களில் தொழிலாளராகப் பணி புரிந்து வந்தார்.

விபத்தில் படுகாயமடைந்த அவர் சிகிச்சைக்காக மன்னார் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரணிலுக்கு 2025இல் ஐ.நாவில் உயர்பதவி

## உதயங்க வீரதுங்க தகவல்

கொழும்பு, ஏப். 09

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 2025 இல் ஐக்கிய நாடுகள் சபையில் உயர்பதவியொன்று கிடைக்கப்பெறவுள்ளது. இதற்கு இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளது என்று ரஷ்யாவுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

இணைய ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

“ ரணிலுக்கு சர்வதேசத்தில் நல்லபெயர் வந்துள்ளது. ஜனாதிபதி வேட்பாளர் பெயர் பட்டியலில் அவரின் பெயர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் 2025 இல் ஐ.நாவில் ரணிலின் பெயர் இருக்கும். அந்த பதவிமூலம் எமது நாட்டுக்கும் கௌரவம் கிட்டும்.

ஐ.நா. பொதுச்செயலாளர் பதவி அல்ல. அதற்கு அடுத்த நிலையில் உள்ள பதவி. பிறகு ஐ.நா. பொதுச் செயலாளர் பதவிக்கும் போட்டியிடலாம். இந்தியாவும் இணக்கம் தெரிவித்துள்ளது.” - என்றார்.

எனினும், ஜனாதிபதி தரப்பில் இருந்து இது தொடர்பில் எவ்வித தகவலும் இன்னும் வெளியாகவில்லை.(அ)

# வடக்கில் ஒரு வருடத்தில் 50 பேர் நீரில் மூழ்கி பலி!

யாழ்ப்பாணம், ஏப். 09

வடக்கு மாகாணத்தில் கடந்த ஆண்டு நீரில் மூழ்கி 50 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலேயே அதிக எண்ணிகையாட உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

யாழ்ப்பாண பொலிஸ் பிராந்தியத்தில் 13 பேரும், காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் 2 பேரும், மன்னார் பொலிஸ் பிராந்தியத்தில் 6 பேரும், வவுனியா பொலிஸ் பிராந்தியத்தில் 5 பேரும், முல்லைத்தீவு பொலிஸ் பிராந்தியத்தில் 8 பேரும் மற்றும் கிளிநொச்சி பொலிஸ் பிராந்தியத்தில் 16 பேருமாக வடக்கில் 50 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

“நாளாந்தம் இரண்டு அல்லது மூன்று பேர் நீரில் மூழ்கி உயிரிழக்கின்றனர். எங்களின் தகவல்களின்படி வருடாந்தம் 700 - 800 பேர் இவ்வாறு இறக்கின்றனர். பண்டிகை காலத்தில் இந்த எண்ணிக்கை அதிகரித்து வருகிறது” என சுகாதார அமைச்சின் தொற்றா நோய், விபத்து தடுப்பு மற்றும் முகாமைத்துவப் பிரிவின் தலைவர் சமூக வைத்திய நிபுணர் சமித்த சிறிதுங்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சு.கவின் அரசியல் பீட கூட்டம் சட்டவிரோதம்

## துஷ்மந்த மித்ரபால

கொழும்பு, ஏப். 09

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தலைமையில் சுதந்திரக் கட்சியின் சிரேஷ்டர்கள் குழு நேற்று நடத்திய அரசியல் பீடக் கூட்டம் சட்டவிரோதமானது என சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் பாராளுமன்ற உறுப்பினர் சார்த்தி துஷ்மந்த மித்ரபால தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் அரசியலமைப்பின் பிரகாரம், கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, அரசியல் சபையைக் கூட்டுவதற்கு அதிகாரம் உள்ளதுடன், அவருக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலைமையைக் கருத்திற்கொண்டு, நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் கட்சியின் செயற்குழுத் தலைவராக ஒருவரை நியமிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டுமென துஷ்மந்த மித்ரபால சுட்டிக்காட்டினார்.

இந்த சட்டவிரோத செயலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்போது, சட்ட கட்டமைப்பிற்கு அமைவாக உரிய நீதிமன்ற உத்தரவுகளுக்கு அமைய சுதந்திரக் கட்சி செயற்படும் என அவர் குறிப்பிட்டார். (அ)

# விடுமுறை நாட்களிலும் தடையின்றி எரிபொருள்!



கொழும்பு, ஏப். 09

விடுமுறை நாட்களில் தடையின்றி எரிபொருள் விநியோகம் செய்யப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

எக்ஸ் தளத்தில் அவர் வெளியிட்ட பதிவில்-

அடுத்த 12 மாதங்களுக்கு போதுமான எரிபொருள் சரக்குகளை கொண்டு வர அமைச்சு திட்டமிட்டுள்ளது.

புதிய எரிபொருள் நிலையங்களை நிறுவுவதற்கு பல விளம்பரங்கள் வெளியிடப்பட்டுள்ளன-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஆரோக்கியமான உணவுகள் மூலம் தாய்மார்களை பாதுகாக்கவேண்டும்

## சஜித் பிரேமதாஸ ஆலோசனை

கொழும்பு, ஏப். 09

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு வழங்கப்படும் போசாக்கு உணவுத் திட்டத்தை வெறுமனே இலவசமாக பகிர்ந்தளிக்கும் திட்டமாக நோக்கவேண்டாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஆரோக்கியமான உணவுகளைக் கொண்டு தாய்மார்களை பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

ஹங்வெல்லை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அத்துடன், தற்போது நாட்டில் ஊட்டச்சத்து குறைப்பாடு அதிகரித்துள்ளதால் அதனைத் தவிர்க்க ஆரோக்கியமான உணவுகளைக் கொண்டு தாய்மார்களை பாதுகாப்பது அவசியம் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரினார்.

(அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.04.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# குஜராத் ரைட்டன்ஸ் அணியை வெற்றி கொண்டது லக்னோ!



லக்னோ, ஏப். 09

ஐ. பி. எல். இருபது - 20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் குஜராத் ரைட்டன்ஸ் அணியை 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ்.

லக்னோவில் நடந்த இந்தப் போட்டியில் கே. எல். ராகுல் தலைமையிலான லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடியது.

லக்னோ அணியில் தொடக்க ஆட்டக்காரர்களாக குயின்ரன் டி கொக் மற்றும் கே. எல். ராகுல் இறங்கினர். இதில் குயின்ரன் நான்கு பந்துகளில் ஒரு சிக்ஸர் அடித்து வெளியேறினார். இன்னொரு புறம் கே. எல். ராகுல் 31 பந்துகளுக்கு 33 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து இறங்கிய தேவ்தத் படிக்கல் 7 ஓட்டங்கள், மார்க்கஸ் ஸ்ரொய்னிஸ் 58 ஓட்டங்கள், நிக்கோலஸ் பூரண் 32 ஓட்டங்கள், ஆயுஷ் படோனி 20 ஓட்டங்கள் எடுத்துனர். இறுதியாக குர்ணல் பாண்ட்யா இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். 20 ஓவர்கள் முடிவில் லக்னோ அணி மொத்தம் 163 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

164 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய குஜராத் அணியின் தொடக்க ஆட்டக்காரர்கள் சாய் சுதர்ஷன் (31 ஓட்டங்கள்) மற்றும் ஷூப்மன் கில் (21 ஓட்டங்கள்) இருவரும் நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஆனால், அடுத்தடுத்து இறங்கிய கேன் வில்லியம்சன், பி. ஆர். சரத் தலா ஒன்று மற்றும் இரண்டு ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க அணி தடுமாறியது. விஜய் ஷங்கர் 17 ஓட்டங்கள், தர்ஷன் 12 ஓட்டங்கள், ராகுல் தேவாட்டியா 30 ஓட்டங்கள், ரஷீத் கான் 0, உமேஷ் யாதவ் இரண்டு ஓட்டங்கள் எடுத்தனர்.

இறுதியாக நூர் அகமது அடித்த பந்தை குயின்ரன் பிடி எடுத்ததைத் தொடர்ந்து 33 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத் அணியை வீழ்த்தியது லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி. (ஐ)

# மும்பை அணிக்கு முதல் வெற்றி!

மும்பை, ஏப். 09

நடப்பு ஐ. பி. எல். தொடரின் 20ஆவது லீக் போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 29 ஓட்டங்களில் வென்றது மும்பை இந்தியன்ஸ் அணி. இதன் மூலம் நடப்பு தொடரில் முதல் வெற்றியை பெற்றுள்ளது மும்பை அணி. அந்த அணிக்காக ரொமாரியோ ஷெப்பர்ட் 10 பந்துகளில் 39 ஓட்டங்கள் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற டில்லி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணிக்காக முன்னாள் தலைவர் ரோஹித் சர்மா மற்றும் இஷான் கிஷன் தொடக்க ஆட்டக்காரர்களாக களம் கண்டனர். இருவரும் 80 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர். ரோகித், 27 பந்துகளில் 49 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இந்தத் தொடரில் முதல் முறையாக விளையாடிய சூர்யகுமார் யாதவ், ஓட்டம் ஏதும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹார்திக் பாண்டியா துடுப்பெடுத்தாட வந்தார். அதிரடி காட்டிய இஷான் கிஷன் 42 ஓட்டங்களில் வெளியேறினார். ரோஹித் மற்றும் இஷான் என இருவரையும் அக்சர் வெளியேற்றினார். திலக் வர்மா 6 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். ரிம் டேவிட் உடன் இணைந்து 60 ஓட்டங்களுக்கு இணைப்பாட்டம் அமைத்தார் ஹார்திக். நிதானமாக ஆடிய அவர் 33 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார்.

20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்கள் எடுத்தது மும்பை அணி. ரிம் டேவிட் 21 பந்துகளில் 45 ஓட்டங்கள் எடுத்தார். 7ஆவது துடுப்பாட்ட வீரராகக் களம் கண்ட ரொமாரியோ ஷெப்பர், 10 பந்துகளில் 39 ஓட்டங்கள் எடுத்து மிரட்டினார். 3 பௌண்ட்ரி, 4 சிக்ஸர்களை அவர் விளாசியிருந்தார். டில்லி அணிக்காக அக்சர் மற்றும் நோர்ட்ஜே தலா 2 விக்கெட்களை வீழ்த்தி இருந்தனர். கலீல் அகமது ஒரு



விக்கெட் கைப்பற்றி இருந்தார்.

235 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை டில்லி அணி விரட்டியது. பிரித்வி ஷா மற்றும் டேவிட் வோர்ணர் இணைந்து இன்னிங்ஸை ஓப்பன் செய்தனர். வோர்ணர் 10 ஓட்டங்களில் வெளியேறினார். பின்னர் பிரித்வி ஷா மற்றும் அபிஷேக் போரல் இணைந்து 88 ஓட்டங்கள் இணைப்பாட்டம் அமைத்தனர்.

பிரித்வி 66 ஓட்டங்களிலும், அபிஷேக் 41 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர். ஸ்டப்ஸ் 25 பந்துகளில் 71 ஓட்டங்கள் எடுத்து அதிரடியாக ஆடினார். மறுமுனையில் அணித்தலைவர் பந்த், அக்சர் படேல், லலித் யாதவ், குமார் குஷக்ரா, ஜய் ரிச்சர்ட்சன் ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

20 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 205 ஓட்டங்கள் எடுத்தது டில்லி. அதன் மூலம் 29 ஓட்டங்களில் மும்பை அணி வெற்றி பெற்றது. தொடர்ச்சியாக மூன்று போட்டிகளில் தோல்வியை தழுவிய நிலையில் இந்த வெற்றியை மும்பை பதிவு செய்துள்ளது. மும்பை அணிக்காக ஜெரால்ட் கோட்ஸி 4 விக்கெட்கள், பும்ரா 2 விக்கெட்கள், ரொமாரியோ ஷெப்பர்ட் ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

அக்சர் ரன் அவுட் ஆனார். ஆட்ட நாயகன் விருதை ரொமாரியோ ஷெப்பர்ட் வென்றார்.



# மும்பை இந்தியன்ஸ் புதிய சாதனை!

மும்பை, ஏப். 09

ஐ. பி. எல். தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடந்த போட்டியில் மும்பை இந்தியன்ஸும், டில்லி கப்பிட்டல்ஸும் மோதின.

இந்த போட்டியில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி இருபது - 20 கிரிக்கெட் வரலாற்றில் மாபெரும் சாதனை ஒன்றை நிகழ்த்தியுள்ளது.

ரி - 20 வரலாற்றில் ஒரு வீரர் கூட அரைச்சதம் அடிக்காமல் ஓர் இன்னிங்ஸில் அடிக்கப்பட்ட அதிகபட்ச ஓட்டங்களை பதிவு செய்த அணிகளின் பட்டியலில் மும்பை இந்தியன்ஸ் தற்போது முதலிடத்தை பிடித்துள்ளது.

இதற்கு முன்னதாக சோமர்செட் - கென்ட் அணிகளுக்கு இடையேயான போட்டியின்போது சோமர்செட் அணியில் ஒரு வீரர் கூட அரைச்சதம் அடிக்காமல் 226 ஓட்டங்கள் அடித்ததே அதிகபட்ச ஓட்டங்களாக இருந்தது. தற்போது அந்த சாதனையை முறியடித்த மும்பை இந்தியன்ஸ் புதிய சாதனையை படைத்துள்ளது.

பட்டியல் வருமாறு,

மும்பை இந்தியன்ஸ் - டில்லி கப்பிடல்ஸ் - 234 ஓட்டங்கள், சோமர்செட் - கெண்ட் - 226 ஓட்டங்கள், அயர்லாந்து - நேபாளம் ஏ - 222 ஓட்டங்கள், அவுஸ்திரேலியா - இங்கிலாந்து - 221 ஓட்டங்கள் (ஐ)

# ஐ. சி. சியின் சிறந்த வீரராக இலங்கையின் கமிந்து மெண்டிஸ்!




டுபாய், ஏப். 09

மார்ச் மாதத்துக்கான ஐ. சி. சியின் சிறந்த வீரர் விருதை இலங்கை அணியின் கமிந்து மெண்டிஸ் தெரிவானார்.

சர்வதேச கிரிக்கெட் சபை ஐ. சி. சி. ஒவ்வொரு மாதமும் சிறந்த வீரர், வீராங்கனையை தெரிவு செய்து வருகிறது. அதன்படி மார்ச் மாதத்துக்கான சிறந்த வீரர் மற்றும் வீராங்கனையை தெரிவு செய்ய தலா 3 வீரர் மற்றும் வீராங்கனைகளை ஐ. சி. சி. அறிவித்திருந்தது.

இதன்படி மார்ச் மாதத்துக்கான சிறந்த வீரர் விருதுக்கான பரிந்துரை பெயர் பட்டியலில் இலங்கையின் கமிந்து மெண்டிஸ், அயர்லாந்தின் மார்க் ஆடிர், நியூசிலாந்தின் மேட் ஹென்றி ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

மார்ச் மாதத்துக்கான சிறந்த வீரராக இலங்கை அணியை சேர்ந்த கமிந்து மெண்டிஸ் தெரிவானார். இதேபோல, மார்ச் மாதத்துக்கான சிறந்த வீராங்கனை விருதை இங்கிலாந்து அணியின் மாயா பவுஷிர் தெரிவானார். (ஐ)

# சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் டேனியல் காலின்ஸ் சம்பியன்!

வாஷிங்டன், மார்ச் 09

டாரியா கசட்கினாவை இலகுவாக வீழ்த்தி சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார் டேனியல் காலின்ஸ்.

சார்ள்ஸ்டன் ஓப்பன் ரென்னிஸ் தொடர் அமெரிக்காவில் நடைபெற்றது. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில் அமெரிக்காவின் டேனியல் காலின்ஸ் ரஷ்யாவின் டாரியா கசட்கினாவை எதிர்கொண்டார்.

பரபரப்பாக நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட இந்தப் போட்டியில் டேனியல் காலின்ஸ் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதன் மூலம் 6-2, 6-1 என்ற நேர் செற் கணக்கில் டாரியா கசட்கினாவை வீழ்த்தி டேனியல் காலின்ஸ் சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

# ஈரான் இராணுவ தலைமையை அழிப்பதில் அமெரிக்கா -இஸ்ரேல் இணைந்து கங்கணம்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா



ஈரான் இராணுவ தலைமையை அழிப்பதில், அமெரிக்கா -இஸ்ரேல் இணைந்து கங்கணம் கட்டியுள்ளமைக்கு சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸில், ஈரான் துணை தூதரகத்தை முற்றாக அழித்த இஸ்ரேலின் தாக்குதல் மேலும் உறுதிப்படுத்துகிறது.

1979 ஆம் ஆண்டில் நடைபெற்ற இஸ்லாமியப் புரட்சி, மேற்கு நாடுகளுக்கு சவால் விடும் வகையிலான ஒரு தலைமையை ஈரானில் அதிகாரத்திற்கு கொண்டு வந்தது.

தொடர்ச்சியாக முஸ்லிம்களின் நிலத்தை இஸ்ரேல் ஆக்கிரமிக்கிறது என்பதும் ஈரானின் குற்றச்சாட்டு. ஈரானின் தலைவர்கள், இஸ்ரேலை அழிப்பது தொடர்பாக தொடர்ந்து பேசி வருகின்றனர். அதேபோல, இஸ்ரேல் இருப்பதை ஈரானால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.



ஈரான் தன்னிடம் அணு ஆயுதங்களை வைத்திருக்கக் கூடாது என்றும் இஸ்ரேல் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இஸ்ரேலும் ஈரானை ஒரு அச்சுறுத்தலாகவே எப்போதும் பார்க்கிறது.

இஸ்ரேலும் எந்த வகையிலும் ஈரான் நாட்டின் எல்லைகளைப் பகிர்ந்து கொள்ளவில்லை என்றாலும், இரு நாட்டினரிடமும் இந்த பதற்றமும் மோதல் போக்கும் தொடர்ந்து இருந்து வருகிறது. இஸ்ரேலும் நேரடியாக



புவியியல் ரீதியாக ஈரானுடன் இணைக்கப்படவில்லை என்றாலும், இஸ்ரேலுடன் எல்லையை பகிர்ந்துள்ள லெபனான், சிரியா, பாலஸ்தீனம் உள்ளிட்ட நாடுகளுக்கு ஈரானின் தாராளமான ஆதரவு இருக்கிறது.

**சிரியாவில் ஈரான் தூதரகம் அழிப்பு:**

காசாவில் யுத்தம் தீவிரமாகையில், கடந்த வாரம் சிரியாவின் தலைநகர் டமாஸ்கஸை குறிவைத்து இஸ்ரேல் நடத்திய ஏவுகணை தாக்குதலில் ஈரான் துணை தூதரகம் முற்றாக அழிக்கப்பட்டது.

இஸ்ரேலால் தாக்குதல் நடத்தப்பட்ட போதிலும், இந்த தாக்குதல் குறித்து இஸ்ரேல் இதுவரை எந்தவித பதிலளிக்கவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்த தாக்குதலில் ஈரான் படையின் மூத்த அதிகாரிகள் இருவர் உட்பட 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஈரான் துணை தூதரகத்தை முற்றாக அழித்த இஸ்ரேலின் அடாவடித்தனத்தால், இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையிலான முரண்பாடுகள் மேலும் தீவிரப்படுத்தும் என்று சர்வதேச அரசியல் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

காசா பகுதியில் இயங்கி வரும் ஹமாஸ் போராளிகளுக்கும், லெபனானில் இயங்கும் ஹிஸ்புல்லாவுக்கும் ஈரான் ஆதரவு வழங்கியதே இதற்குக் காரணம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரானிய உயர்மட்ட தளபதிகள் உட்டப 11 பேர் கொல்லப்பட்டததாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதில்



இரண்டு ஈரானிய ஜெனரல்கள் 5 அதிகாரிகள் என 7 பேர் தங்களில் கொல்லப்பட்டதை ஈரானிய இஸ்லாமிய புரட்சிகர காவல்படை உறுதி செய்துள்ளது. ஜெனரல் அலி ரெசா ஜஹ்தி மற்றும் அவரது துணை முகமது ஹாடி ஹாஜி ரஹிமி ஆகியோர் கொல்லப்பட்டனர். 2016 வரை லெபனான் மற்றும் சிரியாவில் குத்ஸ் படைக்கு ஜஹ்தி தலைமை தாங்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.

**கெர்மானில் நினைவு தின தாக்குதல்:**

ஈரான் துணை ராணுவத்தின் சிறப்பு அதிரடிப் படைப் பிரிவு தளபதியாக இருந்தவர் காசிம் சுலைமானி. அந்த நாட்டில் மிகவும் செல்வாக்கு மிக்கவராக விளங்கிய அவர் ஈராக் சென்றிருந்தபோது, அவரைக் குறிவைத்து ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா 2020 ஜனவரி மாதம் தாக்குதல் நடத்தியது. இதில் சுலைமானி உள்பட 8 பேர் உயிரிழந்தனர்.

இந்நிலையில், காசிம் சுலைமானியின் 4-ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது சொந்த ஊரான கெர்மானில் அவருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியில் அடுத்தடுத்து இரு குண்டுகள் வெடித்தன. இந்தத் தாக்குதலில் 103 பேர் உயிரிழந்ததாகவும், 211 பேர் காயமடைந்ததாகவும்,குண்டுவெடிப்பில் இறந்தவர்களில் பெரும்பாலானவர்கள் இரண்டாவது குண்டுவெடிப்பில் உயிரிழந்ததாகவும், முதல் குண்டுவெடிப்புக்குப் பிறகு அங்கு மீட்புப் பணியில் ஈடுபடுவதற்காக அவர்கள் அங்கு குழுமியதாகவும் கூறப்படுகிறது.



இந்தத் தாக்குதலுக்கு அமெரிக்காவும், இஸ்ரேலும் தான் காரணம் என்று ஈரான் குற்றஞ்சாட்டியது. ஆயினும் இத்தாக்குதலுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று கூறிய அமெரிக்காவும் இஸ்ரேலும் கூறியிருந்தன.

**யாரிந்த ஜெனரல் சுலைமானி:**

முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் நேரடி உத்தரவின் பேரிலியே 2020 ஜனவரியில் ஜெனரல் காசிம் சுலைமானி படுகொலை செய்யப்பட்டதாக பென்டகன் தெரிவித்தது.

அமெரிக்கர்களைக் கொலை செய்ய திட்டமிட்டிருந்த ஈரானின் முக்கியப் படைத் தளபதி காசிம் சுலைமானி, எப்போதோ கொல்லப்பட்டிருக்க வேண்டியவர் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அப்போது கூறியிருந்தார்.

பாக்தாத் சர்வதேச விமான நிலையத்தில் 2020 ஜனவரி 3இல் ஈராக் துணை ராணுவப் படையான ஹஷீத் அல்-ஷாபியின் வாகனங்கள் மீது ஆளில்லா விமானம் மூலம் அமெரிக்கா நடத்திய தாக்குதலில், ஈரானின் இஸ்லாமிய புரட்சி ராணுவத்தின் வெளிநாட்டுப் பிரிவான குத்ஸ் படையின் ஜெனரல் காசிம் சுலைமானி உயிரிழந்தார்.

அந்தத் தாக்குதலில் தங்களது துணைத் தலைவர் அபு மஹதி அல்-முஹாந்திஸ் உள்பட மேலும் 7 பேர் உயிரிழந்ததாக ஹஷீத் அல்-ஷாபி துணை ராணுவப் படை தெரிவித்தது.

ஈராக்கில் இஸ்லாமிய தேச (ஐ.எஸ்.) தீவிரவாதிகளுக்கு எதிரான போரில், அந்த நாட்டு ராணுவத்துடன் ஹஷீத் அல்-ஷாபி படை இணைந்து சண்டையிட்டது.

ஈரானின் இஸ்லாமிய புரட்சி ராணுவனத்தின் குத்ஸ் படைப் பிரிவு, வெளிநாடுகளில் ஈரானுக்கு ஆதரவான மறைமுகப் போரிலும், உளவுப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. இந்த அமைப்பின் தலைவரான காசிம் சுலைமானி, மிகச் சிறப்பாக செயல்பட்டு ஈரான் மக்களிடையே மிகுந்த செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தார்.

இந்த தாக்குதல் பற்றி முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், அமெரிக்கர்களைக் கொலை செய்தது மற்றும் ஏராளமானோர் காயமடைந்ததற்கு சுலைமானி காரணமாக இருந்தார் என்று குற்றம்சாட்டினார். பல ஆண்டுகளுக்கு முன்பே அவர் கொல்லப்பட்டிருக்க வேண்டும் என்றும் டிரம்ப் கூறினார்.

எனினும், இந்தத் தாக்குதல் குறித்து அமெரிக்க நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை என்று எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சியினர் குற்றம் சாட்டியமை குறிப்பிடத்தக்கது.

# வடக்கு, கிழக்கில் பொருளாதார நெருக்கடியின் பின்னரான நுண்நிதிச் செயல்பாடுகளும் பெண்களும்!

சுகன்யா காண்டீபன்
நியந்தினி கதிர்காமர்



இலங்கையில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியின் சுமைகள் ஒவ்வொரு குடும்பங்கள் மற்றும் பெண்களின் மீதும் சுமத்தப்பட்டுள்ளன. இந்த சூழ்நிலையில் கடனைப் பெறுவது பெண்கள் தமது நிதித் தேவையை சமாளிக்கும் ஒரு வழியாக இருக்கின்றது. இது மேலும் அவர்கள் சுரண்டப்படுவதற்கும், உடமையிழப்பிற்கு ஆளாவதற்கும் வழிவகுக்கின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான வடக்கு மற்றும் கிழக்கில் நுண்கடன் ஒரு முக்கிய பிரச்சினையாகப் பரிணாமித்தது. 2018இல் நுண்கடன் நிறுவனங்களின் செயபாடுகளை குறைக்க சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கொவிட் காலத்தில் கடன் மீளச்செலுத் தும் கால அவகா சங்களும் நீடிக்கப்பட் டது. எனினும், தற்போதைய பொருளா தார நெருக்கடியின் தாக்கத்தினால் நுண்நிதிக் கடன்கள் மற்றும் குடும்பக் கடன்கள் அதிகரிப்பதை மீண்டும் அவதானிக்க முடிகின்றது. அன்று நுண்கடன் நிதிநிறுவனங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் தற்காலிக தீர்வையே கொடுத்திருந்தது. தற் போது நாம் எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக் கடியுடன் ஏற்பட்டுள்ள நீண்டகால தாக்கம் வித்தியாசமானதும் புதிரானதுமான சூழலை உருவாக்கியுள்ளது.


### நுண்நிதிச் செயற்பாடுகள்

நுண்நிதி நிறுவனங்கள் முன்பைவிட மிகவும் துரித மாக தமது கடன் வழங்கலை செய்கின்றன. குறிப்பாக தனியார் நிதி நிறுவனங்கள் ஒன்லைன் கடன்கள் என்ற புதிய பரிமானத்தை பெற்று சமூக வலைத்தளங்களிற் கூடாக மிகக் குறைந்த நேரத்தில் கடன்களை வழங்குகின் றன. அது தவிர நாட் கடன்கள், கிழமைக் கடன்கள் மற்றும் மாதக் கடன்கள் என வீடு தேடி வந்து நுண்நிதி நிறுவனங்க ளால் கடன்கள் வழங்கப்படுகின்றது. சிறு வாழ்வாதார முயற்சிகளில் ஈடுபட்டுள்ளவர்களால் நாள் வட்டிக் கடன்கள் போன்றவையும் பெறப்படுகின் றன. மேலும், உள்ளூர் கடைகளில் கடனிற்கு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்தல், அரச சார்பற்ற நிறுவனங்களுக்கூடாக உருவாக்கப்பட்ட சிறு குழுக்கள், நிதிக் கூட்டுறவு அமைப்புக்கள் மற்றும் சமுர்த்தி போன்றவற்றிலும் கடன்களைப் பெறுகின்றார்கள்.

கடன்களை மீளச்செலுத்துவதற்கு மீண்டும் கடன்களைப் பெறுவதும், அதற்காக வாரத்தில் பாதி நாட்கள் குழுக்கூட்டங்களுக்குச் செல்வதும் கிராமங்களிலுள்ள பெண்களின் வாழ்வியலாகவும் மாறியுள்ளது. வாராந்தம் சிறு குழுக் கூட்டங்களில் பங்கேற்பதிலும் சேமிப்பு செய்வதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள். ஏனெனில், சேமிப்பு மற்றும் ஒழுங்கான வரவு என்பவற்றுக்கூடாக அவசர தேவைகளுக்கு உடனடியாக ஓரளவு பெரிய கடன்களைப் பெறத் தகுதியானவர்களாக தம்மை உறுதிப்படுத்துவதற்காக. ஆனால், அவர்கள் தமது வருமானத்தின் ஒரு பகுதியை சேமிப்பதை விட, சிறு கடன்களைப் பெற்றே சேமிப்புக்களைச் செய்ய முடிகின்றது. பெரிய நிதித் தொகையாக தேவைப்படும் போது நுண்நிதி நிறுவனங்களின் கடன்களை அதிகூடிய வட்டிவீதங்களில் பெறுகின்றார்கள். இக்கடன்களை மீளச்செலுத்துவதற்கு குறைந்த வட்டி வீதத்தில் கடன்களை வழங்கும் சமூக நிறுவனங்களிடமிருந்து (கூட்டுறவுகள், மகளிர் சங்கங்கள், கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் சமுர்த்தி) கடன்களைப் பெறுகின்றார்கள். இவ்வகையாக, நெருக்கடியின் மத்தியில் நுண்நிதிச் செயல்பாடுகளினால் பெண்கள் மீளமுடியாத கடன் பொறிக்குள் தள்ளப்படும் அபா யநிலை உருவாகியுள்ளது.

### குடும்பக் கடன்களின் நிலை

நெருக்கடிக்கு முன் வாழ்வாதாரத்திற்காக குறிப்பாக கால்நடை வளர்ப்புக்காக கடன்களை பெற்றவர்கள், தற்போது தீவனம் உட்பட பராமரிக்கும் செலவுகள் அதிகரித்துள்ளதால், வாழ்வாதாரச் செயல்பாடுகளை நிறுத்தி கால்நடைகளை விற்கின்றனர். வருமானங்கள் குறைவடைந்ததால் வாழ்வாதாரத்தை தொடர மேலும் கடன் வாங்கத் தயங்குகின்றனர். விவசாய மற்றும் வீட்டு உபகரணங்கள் உட்பட சிறிய சொத்துக்களை வைத்திருப் பவர்கள் அவற்றை அடகு வைத்து அல்லது விற்று விடு கின்றார்கள். இவ்வகையாக வாழ்வாதார இழப்புக்களும், உடைமையிழப்புகளும் அதிகரிப்பதால் மக்கள் மேலும் கடன்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இப்போது கடன் பெறுபவர்கள் அதை வாழ்வாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக கடன்களைப் பெறவில்லை, அவர்களின் வாழ்வாதாரமே கடன்கள் தான்.



மக்களின் நிதித் தேவை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது - இது வெறுமனே அவர்களின் ஆடம்பர செலவுகளால் அதிகரிக்கப்படவில்லை. மாறாக தற்போது நிலவும் அதிகூடிய வாழ்க்கைச் செலவினால் அடிப்படைத் தேவைகளை சராசரிக்கும் குறைவாக பூர்த்திசெய்யும் போது கூட அதிகரிக்கின்றது. பெண்கள் தங்கள் உணவு முறைகளை மாற்றி, உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைத்த பிறகும் தங்கள் குடும்பங்களுக்கு உணவளிக்க நுண்கடன்களை நம்புகின்றனர்.

கடனைத் திருப்பிச் செலுத்துவதற்குப் போதுமான வருமானத்தை பெறமாட்டார்கள் என்பதை நன்கு அறிந்தே கடனைப் பெறுகின்றார்கள் - இது பசியைத் தடுப்பதற்கான ஒரு குருட்டு நம்பிக்கையுடனான சமாளிப்பு முறையாகும். மக்களுக்கு கடன் வட்டி வீதங்கள் மற்றும் குடும்ப வரவு - செலவு பற்றிய சரியான புரிதல் இல்லாததால் அவர்கள் கடன்பொறிக்குள் சிக்கவில்லை. ஆபத்தானதென தெரிந்தும் வாழ்வதற்கு வேறு வழியில்லாததாலேயே சிக்குகின்றார்கள். இது விரைவில் மற்றொரு குடும்பக்கடன் நெருக்கடியை உருவாக்கப்போகின்றது.

நெருக்கடியை எதிர்நோக்கும் பெண்களுக்கு அரசு எந்த நிவாரணமும் வழங்கவில்லை. மாறாக, சர்வதேச நாணய நிதியமும் ஜனாதிபதியும் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியதற்காக தங்களை வாழ்த்திக் கொள்கின்றனர். அவர்கள் வளர்ந்துவரும் குடும்பக் கடன் நெருக்கடியைக் கண்டும் பாராமுகமாக இருக்கின்றார்கள்.

### கடன்படு நிலை ஏன் உருவாகியுள்ளது?

அரச திட்டங்கள் மற்றும் கொள்கைகளிலுள்ள குறைபாடுகளால் ஏற்பட்ட நெருக்கடிகள் மற்றும் அந்த நெருக்கடிகளில் இருந்து வெளிவருவதற்கான தீர்வுகள் சாதாரண மக்கள் தலைகள் மீது சுமத்தப்பட்டுள்ளது. குறிப்பாக அமுலுக்கு கொண்டுவரப்பட்டுள்ள மறைமுக வரி மற்றும் மின்சார வரி அதிகரிப்புக்கள் மக்கள் மீது பாரிய சுமையாக மாறியுள்ளது. ஆனால், மக்களால் செலுத்தப்படும் வரிகளுக்கான அடிப்படையான சேவைகளான உணவுப் பாதுகாப்பு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்றவற்றை முன்பிருந்ததை விட அரசாங்கம் மட்டுப்படுத்த எத்தனிப்பது மிகவும் வேடிக்கையானதும் வேதனையானதுமான விடயமாகும்.

ஏற்கனவே வருமானங்களை இழந்துபோயிருந்த மக்கள் மீது புதிதாக ஏற்றப்பட்ட சுமைகள் நிதிப் புழக்கத்திற்கான தேவையை மேலும் அதிகரிக்கிறது. இவ்வாறு அதிகரிக்கும் தேவைகளை அணுகுவதற்கு தமது சிறிய சொத்துகளை அடகு வைத்தல், விற்றல் அல்லது கடன்களைப் பெறுதல் போன்றனவே வழிகளாக இருக்கின்றன. மக்களின் இந்தத் தேவைப்பாடுகளை வாய்ப்பாகப் பயன்படுத்தி நிதிநிறுவனங்கள் ஒவ்வொரு மட்டத்திலும் உள்ள குடிமக்களை இலக்குவைத்து கடன் வலைகளை வீசி வருகின்றன.

இந்த நிலைமை உருவாகுவதற்கு கடனை மையமாகக் கொண்ட நீண்டகால பொருளாதாரக் கொள்கைகளும் காரணமாகும். கடந்த காலத்தில் மக்கள் கடன்பொறிக்குள் சிக்கியதற்குக் காரணம் அவர்களின் ஆடம்பரச் செலவுகளும், நிதி அறிவு இல்லாததுமே என்று குற்றம் சாட்டிய அமைப்புக்கள் தற்போது அரசு பெற்ற கடன் களை மீளச்செலுத்துவதற்காக மக்கள் கடன்பொறிக்குள் சிக்குகிறார்கள் என்ற உண்மையையாவது ஏற்றுக்கொள்வார்களா?

### மாற்றுத்தீர்வுகள்

கடந்த காலத்தில் நுண்நிதி நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக் கைகளுள் வட்டிவீதக் கட்டுப்பாடு, கடன் மன்னிப்பு மற்றும் கடன்களை கட்டுவதற்கான கால அவகாசம் போன்றன முக்கியமாக இருந்தன. மேலும் பெண்கள் சிறு குழுக்களாக இணைவதற்கூடாக வாராந்தம் சேமிப் புகளை செய்து தேவைப்படும்போது மிகவும் இலகுவாக கடன்களை பெறும் செயல்பாடு, நியாயமான வட்டிவீ தத்திலான கடன் அணுகலை விரிவுபடுத்தும் செயற்பா டுகள் மக்களை நுண்கடன் பொறிகளிலிருந்து வெளியே கொண்டுவருவதற்கு முன்னெடுக்கப்பட்ட தீர்வுகளாகும். ஆனால், அத் தீர்வுகள் மக்கள் பாரிய பொருளாதார அதிர்ச்சியினால் மீண்டும் கடன்பொறிக்குள் சிக்குவதை முற்றிலும் தடுக்கவில்லை.

இந்த சூழ்நிலையில், அரசினால் முன் வைக்கப்பட்டுள்ள நுண்நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டமூலம் உண்மையான கடன் பிரச் னைக்கு தீர்வு காணுமா? கடன் தேவைகள் அதிகரித்துக் கொண்டு செல்வதற்கான காரணங்கள் என்ன என்பதை விளங்கி அதற்கு மாற்றுத் தீர்வுகளை தேடாமல், தொடர்ந் தும் கடன்களைப் பெறுவதற்கான ஒழுங்கமைப்புக ளையே நாம் தேடிக்கொண்டு இருக்கப்போகின்றோமா?

கடந்த ஐந்து தசாப்தங்களாக நிலவிவரும் கிராமியப் பொருளாதாரத்தின் நிதிமயமாக்கல் மற்றும் பெண்களின் உழைப்பையும், உடைமைகளையும் சுரண்டும் நுண்நிதித்திட்டம் ஒரு பாரிய நெருக்கடியின் மத்தியில் பொருத்தமில்லாமல் போகின்றது. நுண்நிதி எனும் கருத்தை மறுபரிசீலனை செய்து அது பெண்களை வலுவூட்டுகின்றது என்ற கட்டுக்கதையை உடைக்க வேண்டியுள்ளது. பொருளாதார நெருக்கடியின் சுமையை பெண்கள் மேல் சுமத்துவதை தவிர்க்க வேண்டும். மாறாக, உணவுப் பாதுகாப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மற்றும் கிராமியப் பொருளாதாரத்தை வலுப்படுத்தத் தேவையான முதலீடுகளை வழங்க அரசாங்கம் மீண்டும் பொறுப்பேற்க வேண்டும்.

(எழுத்தாளர்கள்: பொருளாதார நீதிக்கான பெண்ணியக் குழுமத்தின் உறுப்பினர்கள். சுகன்யா காண்டீபன் - வடக்கில் நிதிக் கூட்டுறவுகளுடன் கடந்த ஆறு வருடங்களாக ஆய்வு வேலைகளில் ஈடுபடுகிறார். நியந்தினி கதிர்காமர் - கல்வித்துறையில் முதுமானிப்பட்ட மாணவியும் பெண்ணிய ஆய்வாளருமாவார்.)

# இலுப்படிச்சேனையில் வர்த்தக நிலையங்களை திறந்து வைத்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில்

மட்டக்களப்பு, ஏப். 09

செங்கலடி இலுப்படிச்சேனையில் உள்ளூர் தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் வர்த்தக நிலையங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் திறந்து வைத்தார்.

22 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிராமிய வர்த்தக நிலையங்கள் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டன.




இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் உட்பட அரச அதிகாரிகளும் கலந்துக் கொண்டனர். (அ)

# கல்முனை பிரதேச செயலாளர் லியாகத் அலிக்கு பாராட்டு

அம்பாறை, ஏப். 09

கல்முனை பிரதேச செயலாளராக கடந்த 2021 ஆம் ஆண்டு கடமையேற்று இன்று வரை தொடர்ந்து பல சேவைகளை ஆற்றும் ஜே. லியாகத் அலியின் காத்திரமானதும் துணிகரமானதுமான சேவையைப் பாராட்டி கல்முனை மக்களால் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

ஆஷாத் ப்ளாஸா வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற கல்முனையன்ஸ் போரத்தின் வருடாந்த இப்தார் ஒன்றுகூடல் நிகழ்வின்போது இக்கௌரவம் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டது.



கல்முனை மாநகர சபை எந்திரி ஜௌஸி அப்துல் ஜப்பார், உதவி திட்டமிடல் பணிப்பாளரும், கல்முனையன்ஸ் போரத்தின் கணக்காய்வாளருமான ஏ. எல். மஜீட், போரத்தின் சிரேஷ்ட செயற்பாட்டாளர் ஜலீல் சுலைமான், போரத்தின் நிருவாக பணிப்பாளர் எம். எம். காமில் மற்றும் போரத்தின் நிறைவேற்று பணிப்பாளர் முபாரிஸ் எம். ஹனீபா ஆகியோரால் பிரதேச செயலாளருக்கு பொன்னாடை போர்த்தி பாராட்டி கௌரவம் வழங்கப்பட்டது. (அ)

# மட்டக்களப்பில் 145 மாணவர்களுக்கு இலவச கற்றல் உபகரணம் வழங்கல்

மட்டக்கலப்பு, ஏப். 09

கிழக்கு மாகாண கட்டளைத் தளபதியின் வழிகாட்டலில் கடந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொடுப்பதிலும் கல்வி மற்றும் சமூகப் பொருளாதார ரீதியில் அவர்களின் வாழ்க்கை தரத்தை மேலும் கட்டியெழுப்புவதற்கான பல்வேறு மனிதாபிமானப் பணிகளிலும் இலங்கை இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இதற்கமைவாக மட்டக்களப்பு கல்குடா வலயக்கல்வி அலுவலத்திற்குட்பட்ட தெரிவு செய்யப்பட்ட எட்டு பாடசாலைகளை சேர்ந்த 145 வறிய மாணவர்களுக்கு தனவந்தர்களின் உதவியுடன் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியிலான இலவச கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் 232 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் பிரசாத் ஏற்பாட்டில் கிரான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக இராணுவத்தின் 23அவது காலா படைப்பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரேமரத்ன கலந்து கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிரான் பிரதேச செயலாளர் மு.சித்திரவேல், வாழைச்சேனை உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் ஜெமீல், வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லசந்த பண்டார உள்ளிட்ட பாதுகாப்பு படைப் பிரிவுகளின் இராணுவ உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

(அ)



